# உதயன்

| சுடர் : 36<br>கதிர் : 133 | வியாழக்கிழமை | பங்குனி 26 ஆம் நாள்<br>08 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20<br>விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000<br>விளம்பரம்: 021 493 1111 |
|---|---|---|---|---|---|


# 82 தொற்றாளர்கள் வடக்கில் நேற்று!

யாழ்ப்பாணம், ஏப். 8

முல்லேரியாவிலும் யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்தைச் சேர்ந்த ஆயிரத்து 71 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் 82 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

20

முச்சந்தி முரளி

"அப்ப ஒருமாதிரி 14 நாள் விளக்கமறியல் முடிஞ்சு யாழ்ப்பாண ரவுண் கடையளுக்கு இண்டைக்கு விடுதலை போல"



# யாழ். நகர வர்த்தக நிலையங்கள் 14 நாள்களின் பின் இன்று திறப்பு

மாவட்டச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ்ப்பாணம் மாநகர மத்தியில் உள்ள கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களில் கொவிட்-19 நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் பணியாற்றும் கடைகள் தவிர்ந்த ஏனைய கடைகளை இன்று வியாழக்கிழமை தொடக்கம் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர்

19

நாடாளுமன்ற உறுப்புரிமை;

# ரஞ்சன் நீக்கம்!

எதிர்க்கட்சிகள் போர்க்கொடி


கொழும்பு, ஏப். 8

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன்

19

பேரழிவிலிருந்து நாட்டை மீட்டெடுக்க

# சமஷ்டி முறைமையே நாட்டுக்குத் தேவை



புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர் குழுவிடம் விக்கி இடித்துரைப்பு

கொழும்பு, ஏப்ரல் 8

சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறைமையிலான அரசமைப்பு ஒன்றே உருவாக்கப்பட வேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறைமையிலான அரசமைப்பு உருவாக்கப்பட்டால்தான் இந்த நாடு பேரழிவிலிருந்து மீண்டெழுந்து அமைதி, சமாதானம், அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் ஆகிய உயர் வழிகளில் மேலுயர முடியும்

19

# அலைபேசியில் பிரபாகரன்; விளக்கமறியலில் இளைஞன்

யாழ்ப்பாணம், ஏப். 8

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரான வே.பிரபாகரனின் ஒளிப்படத்தை தனது அலைபேசியில் வைத்திருந்த இளைஞர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

19

# புலிகளைப் போற்றி, நினைவுகூர்ந்து பேஸ்புக்கில் பதிவிட்டாலும் கைது!

கொழும்பு, ஏப். 8

தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களைப் புகழ்ந்தும் நினைவு கூர்ந்தும் பகிரங்கமாக கருத்துக்களைத் தெரிவிப்பவர்கள் அனைவரும் இனிமேல் தகுதி தராதரம் பாராது உடன் கைதுசெய்யப்படுவார்கள்

20

# மாநகர காவலர்கள் குழு இன்று அங்குரார்ப்பணம்!

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ்ப்பாண மாநகரத்தை தூய்மையாக வைத்திருக்கும் நோக்கிலும், சுகாதார விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகளை நடைமுறைப்படுத்தும் வகையிலும் யாழ். மாநகர காவலர்கள் குழு இன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. இதற்குப் பரீட்சார்த்தமாக அந்தக் குழு நேற்றுத் தனது பணிகளை ஆரம்பித்தது

19



# துப்பினால் ரூ.2,000 கொட்டினால் ரூ.5,000

நடைமுறையாகின்றது தண்டம்

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ். மாநகரத்தை அசிங்கப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள்மீது அறவிடப்படும் தண்டம் தொடர்பில் யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் அறிவித்துள்ளார். 2 ஆயிரம் ரூபா முதல் 10 ஆயிரம் ரூபா வரையில் மேற்படி தண்டம் விதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: பொது இடங்களில் குப்பைகள் வீசுபவர்கள் மீது

19

சீன ஆக்கிரமிப்புக்களால்

# சிங்கள சமூகத்தில் கிளர்ச்சி வெடிக்கும்

சாணக்கியன் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 8

'இலங்கையில் பெருகிவரும் சீன ஆக்கிரமிப்புகளால் எதிர்காலத்தில் சிங்கள சமூகத்துக்கிடையிலேயே கிளர்ச்சியொன்று உருவாகலாம்' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

குளக்கட்டில் அமைக்கப்பட்டிருந்த

# பாதுகாப்பு வேலியை பிடுங்கி எறிந்த திணைக்களம்

**முல்லைத்தீவு, ஏப். 8**
**முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் அணைக்கட்டுக்கு குறுக்கே அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியை வனஜீவராசிகள் திணைக்க ளத்தினர் பிடுங்கி எறிந்து விட்டனர் என்று முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சுதாகரன் தெரிவித்தார்.**

வவுனிக்குளம் சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

மேலும், கடந்த டிசெம்பர் மாதத்தில் வவுனிக்குளத்தின் அணைக்கட்டு வழியாக பயணித்த வாகனம் ஒன்று குளத்துக்குள் வீழ்ந்ததில் உயிரிழப்புகள் ஏற்பட்டன. அதனையடுத்து வவுனிக்குளத்தின் அணைக்கட்டு வழியாக வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டு, பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டது. மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டது.

இந்தநிலையில், குளத்தின் சூழலில் வனஜீவராசிகள் திணைக்களத்தின் பெயர்ப் பலகைகள் நடப்பட்டுள்ளன. இந்த நிலையில் அணைக்கட்டில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலி வனஜீவராசிகள் திணைக்களத்தால் பிடுங்கி எறியப்பட்டுள்ளது.

வனஜீவராசிகள் திணைக்களத்தின் இந்தச் செயற்பாடு தொடர்பில், குறித்த கூட்டத்தில் வவுனிக்குளம் விவசாயிகள் கண்டனக் குரல் எழுப்பினர். கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரன், இந்தச் சம்பவம் தொடர்பில் மாவட்டச் செயலருடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (த-13)

## புலிகள்கூட ஒரே நேரத்தில் 8 இடங்களில் தாக்கவில்லை

அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 8
விடுதலைப் புலிகள்கூட திட்டமிட்டு ஒரே நேரத்தில் 8 இடங்களில் தாக்குதல் நடத்தியதில்லை என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னணியில் உள்ள சக்திகள் குறித்து தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக இதுவரை 97 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 36 விசாரணைகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன. அரசு யாரையும் பாதுகாக்கவோ குற்றங்களை மூடி மறைக்கவோ முற்படவில்லை. சட்டமா அதிபரே மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். பயங்கரவாத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த புதிய சட்டத்திட்டங்களைக் கொண்டுவர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. - என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-இ)

இலங்கையில் தடை விதிக்கப்பட்ட

## 11 இஸ்லாமிய அமைப்புகளின் பெயர்களை வெளியிட்டது அரசு

கொழும்பு, ஏப். 8
அடிப்படைவாத செயற்பாடுகளுடன் தொடர்புடையவை என்ற அடிப்படையில் 11 இஸ்லாமிய அமைப்புகளுக்கு அரசு தடை விதித்த நிலையில், அந்த 11 அமைப்புகளின் பெயர்களையும் அரசு வெளியிட்டுள்ளது.

குறித்த அமைப்புகளை தடைசெய்யுமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பணித்துள்ளார் என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு தடைசெய்யப்பட்டுள்ள 11 இஸ்லாமிய அமைப்புகள் வருமாறு.

யுனைடெட் தௌஹீத் ஜமாஅத் (UTJ), சிலோன் தௌஹீத் ஜமாஅத் (CTJ), இலங்கை தௌஹீத் ஜமாஅத் (SLTJ), அனைத்து இலங்கை தௌஹீத் ஜமாஅத் (ACTJ), ஜமியத்துல் அன்சாரி சுன்னத்துல் மொஹமதியா (JASM), தாருல் ஆதார் ஜமியுல் ஆதர் இலங்கை இஸ்லாமிய மாணவர் இயக்கம் (SLISM), இஸ்லாமிய அரசு ஈராக் & சிரியா (ஐ.எஸ்.ஐ.எஸ்), அல்கொய்தா, சேவ் த பேர்ள்ஸ் மற்றும் சூப்பர் முஸ்லிம் என்பனவே அவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ-22)

## திருட்டுக்கள் தொடர்பில் வவுனியாவில் மூவர் கைது

வவுனியா, ஏப். 8
வவுனியாவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் மூவரை வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவினர் நேற்றுக் கைது செய்தனர்.

வவுனியாவில் கடந்த சில தினங்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருந்தன. அந்த வகையில், வவுனியாவிலுள்ள இலங்கை வங்கி விடுதிக்குள் கடந்த 30 ஆம் திகதி புகுந்த திருடர்கள் அங்கிருந்த தொலைகாட்சிப்பெட்டி மற்றும் துவிச்சக்கர வண்டி என்பவற்றைத் திருடிச் சென்றிருந்தனர்.

வவுனியா தேக்கவத்தையிலுள்ள வீடு ஒன்றுக்குள் கடந்த முதலாம் திகதி புகுந்த திருடர்கள் அங்கிருந்த தொலைகாட்சிப் பெட்டியையும், 8 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றிருந்தனர்.

வவுனியா குட்செட் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நேற்றுப் புகுந்த திருடர்கள், அங்கிருந்த டி.வி.டி. பிளேயர் மற்றும் முக்கால் பவுண் நிறையுடைய தங்கத் தோடு என்பனவற்றைத் திருடிச் சென்றிருந்தனர்.

குறித்த திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. முறைப்பாட்டுக்கு அமைவாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மானவடுவின் வழிகாட்டலில் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

இதன்போதே குறித்த திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் மதவுவைத்தகுளம், கற்குழி, தேக்கவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 39, 28 மற்றும் 24 வயதுகளையுடைய மூன்று இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-18)

காவல் படை சீருடை விவகாரத்தால்

## யாழ்ப்பாண மாநகர ஆணையாளரிடம் 3 மணித்தியாலங்களாக விசாரணை

யாழ்ப்பாணம், ஏப். 8
யாழ்ப்பாணம் மாநகர சபை நேற்று அமைத்திருந்த காவல் படை தொடர்பில் மாநகர ஆணையாளரிடம் 3 மணித்தியாலங்களுக்கும் மேலாக பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் சேவையை நடத்துவதற்கே பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிலையில் காவல் படை என்ற பெயரில் அரச துறையில் ஐவரை கடமைக்கு அமர்த்தியமை தொடர்பிலேயே இந்த விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்று மாநகர சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் தமிழீழ காவல்துறையின் சீருடையை ஒத்ததாக குறித்த சீருடை காணப்படுகின்றது என்றும் கூறிய பொலிஸார், அந்த ஐந்து காவலர்களிடமும் வாக்குமூலம் பெறவேண்டியுள்ளதால் அவர்களை இங்கு வருமாறு அழையுங்கள் என பொலிஸாரால் கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மாநகர முதல்வர், சட்டத்தரணி வி. மணிவண்ணன் உள்ளிட்ட தரப்பினரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய த்துக்குச் சென்றிருந்தனர்.

மாநகரின் பொது இடங்களில் குப்பை கொட்டினாலும், வெற்றிலை துப்பினாலும் தண்டம் அறவிடப்படும் என்றும் அதனை நடைமுறைப்படுத்தவே யாழ்ப்பாணம் மாநகர காவல் படை உருவாக்கப்பட்டுள்ளது என்றும் மாநகர முதல்வர் மணிவண்ணன் நேற்றுத் தெரிவித்திருந்த நிலையில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

எனினும், இது தொடர்பில் பொலிஸாரின் தகவலைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. (த-319)

## போக்குவரத்துச் சேவைகள் யாழ்.கோட்டையடியில்தான்!

யாழ்ப்பாணத்தின் போக்குவரத்து சேவைகளை தற்போதைக்கு பழைய இடத்தில் அனுமதிப்பதில்லை என்பதுதான் இதுவரையான எமது நிலைப்பாடு என்று யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக, அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகளை தற்போது இயங்க அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களிலிருந்து தொடர்ந்தும் செயற்படுத்துவதே எமது நோக்கம். ஆனால் துரதிஸ்டவசமாக இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் இந்தக் கட்டுப்பாடுகளுக்கு இணங்கிச் செயற்படுவதற்குத் தயாரில்லை. - என்று முதல்வர் மேலும் தெரிவித்தார். (த-319,26,20)

## புத்தாண்டு வர்த்தக சந்தை

பளை, ஏப். 8
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள தொழில் மேம்பாட்டு அலகினர் நடத்தும் சித்திரைப் புத்தாண்டையொட்டிய வர்த்தக சந்தை இன்று வியாழக் கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது. பளை இரட்டைக்கேணி அம்பாள் கோவில் முன்றலில் அமைக்கப்பட்டுள்ள விசேட பந்தலில் இந்தச் சந்தை நடைபெறும். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மக்கள் வீட்டுக் குருவியா?

## துஷார இந்துனில் எம்.பி கேள்வி



**கொழும்பு, ஏப்.8**
**குடும்பமொன்றுக்கு 3 கிலோ அரிசி 14 நாள்களுக்கு போதுமானதாக இருக்குமா? அப்படியானால் ஒருவருக்கு ஒருவேளை உணவுக்கு 17 கிராம் அரிசி தான் ஒதுக்கப்படுகின்றது. வீட்டுக் குருவிகள், காகங்கள் கூட இதனைவிட அதிகம் உண்ணும்.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் சுட்டிக்காட்டினார். நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
நாட்டில் அரிசி விலை உச்சம் தொட்டுள்ளது. கீரிச் சம்பாவின் விலை 200 ரூபாவைத் தாண்டியுள்ளது. இந்த நிலையில் குடும்பமொன்றுக்கு 14 நாள்களுக்கு 3 கிலோ அரிசி போதும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார். 3 கிலோ அரிசி என்பது 3 ஆயிரம் கிராம். இதனை 14 நாள்களில் பிரித்தால் நாளொன்றுக்கு 214 கிராம் அரிசியையே உணவாக்கி உண்ண வேண்டும். 4 பேர் கொண்ட குடும்பமொன்றாக இருந்தால் ஒருவேளையில் ஒருவர் 17 கிராம் அரிசியைத் தான் சாப்பிடவேண்டும். நாட்டு மக்கள் வீட்டுக் குருவிகளா? அல்லது புறாக்களா? என்றார். இதற்கு பதிலளித்த அமைச்சர் பந்துல,
" நான் இவ்வாறானதொரு கருத்தை வெளியிடவில்லை. போலியான முறையில் தகவல் பரப்படுகின்றது." என்றார். (ப-44)

# எம்.பி. ஆகிறார் அஜித் மானப்பெரும



கொழும்பு, ஏப்.8
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ரஞ்சன் ராமநாயக்காவின் இடத்துக்கு அஜித் மானப்பெரும நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட வுள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் முன்னறிவிப்பு எதுவும் இன்றி தொடர்ச்சியாக 3 மாதங்கள் சபை அமர்வில் பங்கேற்காவிட்டால் அவர் எம்.பி. பதவியை இழந்துவிடுவார்.
எனவே, ரஞ்சனின் பதவியைப் பாதுகாக்கும் நோக்கில் அவருக்கு 3 மாதங்கள் விடுமுறை வழங்குவதற்கான யோசனையை எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்திருந் தாலும் அதனை சபாநாயகர் ஏற்கவில்லை. இதனால் ரஞ்சனின் நாடாளுமன்ற ஆசனம் வெற்றிடமாகியுள்ளது என நாடாளுமன்றச் செயலாளரால், தேர்தல் ஆணைக் குழுவின் தவிசாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை சபாநாயகர் நேற்றுமுன்தினம் சபைக்கு தெரியப்படுத்தினார். இதன்படி கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பட்டியலில் அடுத்த இடத்தில் உள்ளவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாவார். இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகும்.
2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஐந்து ஆசனங்கள் கிடைத்தன. விருப்புவாக்கு பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பிடித்த (103,992 வாக்குகள்) ரஞ்சன் தமது எம்.பி. பதவியை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால், 6 ஆம் இடத்தில் உள்ள அஜித் மானப்பெரும எம்.பி.யாகத் தெரிவாகும் நிலை உருவாகியுள்ளது. அஜித் மானப்பெரும, 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் போட்டியிட்டிருந்தாலும் சபைக்குத் தெரிவாகவில்லை. எனினும், 2013 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன உயிரிழந்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அஜித் மானப்பெரும நியமிக்கப்பட்டார். 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டு அஜித் மானப்பெரும வெற்றிபெற்றார். எனினும் 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட அவர் நாடாளுமன்றம் தெரிவாகவில்லை. விருப்புவாக்கு பட்டியலில் 6ஆம் இடத்தைப் பிடித்தார். தற்போது ரஞ்சனின் பதவி பறிபோகும் நிலை உள்ளதால் மீண்டும் அவர் நாடாளுமன்றம் வரவுள்ளார்.
(ப-44)

# சாரா உயிருடன் இருந்தால் நிச்சயம் பிடிக்கப்படுவார்!!!

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணையும் முடியவில்லை என்கிறார் சரத் வீரசேகர

கொழும்பு, ஏப். 8
ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடரும். சாரா கைதுசெய்யப்படவேண்டியவர்களின் பட்டியலில் இருக்கிறார். உயிருடன் இருக்கும் பட்சத்தில் அவர் நிச்சயம் கைது செய்யப்படுவார் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நேற்றுத் தெரிவித்தார்.



சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் நிறைவுபெற்றுள்ளன. 8 சம்பவங்கள் பதிவாகின. அவை தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு ஆவணங்கள் இரு மாதங்களுக்கு முன்னர் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டன. ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை வரும் வரை சட்டமா அதிபர் காத்திருந்தார். தற்போது அந்த அறிக்கையும் கிடைத்துள்ளது. எம்மால் வழங்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை ஒப்பிட்டுத்தான் சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்வார். எடுத்த எடுப்பிலேயே வழக்குத் தாக்கல் செய்துவிடவும் முடியாது. எனவே, சட்டத்தைப் பயன்படுத்தி குற்றவாளிகள் தப்பிக்க முடியாத வகையில் சாட்சியங்கள் முன்வைக்கப்பட வேண்டும். அதற்காகவே காலம் எடுத்திருக்கக் கூடும். இது பற்றி சட்டமா அதிபர் விளக்க மளித்தார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் நிறைவு பெறவில்லை.
அது தொடரும். 31 பிரதான சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதேவேளை, சாரா என்பவர் கைதுசெய்யப்படவேண்டியவர்களின் பட்டியலில் உள்ளார். அவர் உயிரிழந்திருந்தால் கைது செய்ய முடியாது. உயிருடன் இருந்தால் கைதுசெய்யப்படுவார். டி.என்.ஏ. பரிசோதனைகள் தற்போது இடம்பெறுகின்றன - என்றார். (ஒ.44)

# ஆங்கில பாட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.8
கல்விப் பொதுத் தராதர உயர்தர ஆங்கில பாடம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.
பல்கலைக்கழக மொழியியல் மற்றும் ஆங்கிலத் துறையினரின் ஏற்பாட்டில் இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் ஆங்கில பாடத்தில் ஆர்வமாக இருக்கும் அனைவரும் பங்குபற்ற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நௌபர் மௌலவி அரசின் தயாரிப்பா?

## ஐக்கிய மக்கள் சக்தி சந்தேகம்

கொழும்பு, ஏப். 8
ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி கண்டறியப்படவேண்டும் என்று பேராயர் உட்பட அனைத்து தரப்பினரும் வலியுறுத்தி வருவதால் அழுத்தங்களில் இருந்து தப்பிப்பதற்காக நௌபர் மௌலவியை பிரதான சூத்திரதாரியாக அரசு பெயரிட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இவ்வாறு எதிரணி பிரதம கொறடாவும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபைத் ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியைக் கண்டறிவதற்கான உரிய சாட்சிகள் ஆணைக்குழு அறிக்கையில் முன்வைக்கப்படவில்லை. குறிப்பாக, தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதிலிருந்தே அதன் பின்னணியில் வெளிநாட்டுச் சக்தி இருக்கலாம், பிரதான சூத்திரதாரியொருவர் இருக்கலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. எனினும், பிரதான சூத்திரதாரி குறித்து அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.
இந்நிலையில் சம்பவம் நடைபெற்று இரண்டு வருடங்கள் நெருங்கும்வேளையில் நேற்று (நேற்று முன்தினம்) திடீரென பிரதான சூத்திரதாரியொருவர் பெயரிடப்பட்டுள்ளார். பிரதான சூத்திரதாரி குறித்து சாட்சிகள் இருந்திருப்பின் ஏன் ஆணைக்குழுவுக்கு அவை முன்வைக்கப்படவில்லை, நௌபர் மௌலவி என்பவர் சம்பவம் நடைபெற்ற வருடத்தில் ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதியே கைது செய்யப்பட்டிருந்தாலும் அவர் ஆணைக்குழுவில்கூட முன்னிலைப்படுத்தப்படவில்லை.
எனவே இது யாருடையதாவது தயாரிப்பா என்ற சந்தேகம் எழுகின்றது. பிரதான சூத்திரதாரி எங்கே என பேராயர் உட்பட பலர் கடந்த 3 வாரங்களாக கேள்வி எழுப்பி வருகின்றனர். இதற்கு பதிலளிப்பதற்கான நிவாரணமா நௌபர் மௌலவி? என்ற வினாவும் எழுகின்றது. எனவே, அழுத்தங்களிலிருந்து விடுபடுவதற்காக நௌபர் மௌலவியை பிரதான சூத்திரதாரி யாக அரசு பெயரிட்டிருக்கலாம்- என்றார். (ஒ.44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள்

## பட்டியலை வெளியிட்டது தென்மராட்சி செயலகம்

**சாவகச்சேரி,ஏப்.8**

**தென்மராட்சி பிரதேசத்தில் நிரந்தர வீடுகள் இல்லாத 100 குடும்பங் களுக்கு கிராமிய வீடமைப்பு அமைச்சால் ஆறு லட்சம் ரூபா பெறுமதி யான வீடுகள் அமைத்து வழங்கப்படவுள்ளன.**

இந்தத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் பிர தேச செயலகம் மற்றும் கிராம அலுவலர் அலுவலகம் போன்ற இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் திருமணமா னவர்கள், நாட்டின் எந்தப் பாகத்திலும் சொந்த வீடு இல் லாதவர்கள் மற்றும் பிரதேசத்தில் சொந்தக் காணியில் மீளக்குடியேறி யுள்ளவர்கள் இந்தத் திட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். பயனாளிகள் தெரிவுதொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின் நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு முன்னர் முன்னர் எழுத்து மூலமாக அறிவிக்க முடியும் என்று பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-9)





## புத்தாண்டை முன்னிட்டு மாங்குளம் சமுர்த்தி வங்கியில் விற்பனைச் சந்தை திறப்பு

மாங்குளம்,ஏப்.8

புத்தாண்டை முன்னிட்டு மாங்குளம் சமுர்த்தி வங்கி வளாகத்தில் "சமுர்த்தி அபிமானி விற்பனை சந்தை" நேற்றுமுன்தினம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் த.அகிலன் தலைமையில் திறக்கப்பட்டது. சமுர்த்தி அபிமான விற்பனைச் சந்தைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து சமுர்த்தி வங்கிகளி லும் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தா.அகிலன், முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் திருமதி ஜெயபவானி கணேசமூர்த்தி, புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் முத்துசாமி முகுந்தகஜன், மாங்கு ளம் கிராம அலுவலர் த.தனபால்ராஜ், தலைமையக சமுர்த்தி முகாமையாளர் திருமதி சுதாஜினி, சமுர்த்தி மகாசங்க முகாமையாளர் திருமதி இ.பிரதா, ஒட்டுசுட் டான் சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி பா.கஜ னரதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-19)

## மீள்குடியமர்ந்த குடும்பங்களின் வீடுகளை சீரமைக்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ்ப்பாண மாவட்டத்தில் மீள் குடியமர்ந்த குடும்பங்களது வீடுக ளின் சீரமைப்புக்கு கிராமிய வீட மைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சால் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இதன்படி பெரிய அளவில் சேதம டைந்த 247 வீடுகளுக்கு தலா 3 லட்சம் ரூபாவும், பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு தலா ஒன்றரை லட்சம் ரூபாவும் வழங் கப்படவுள்ளன. யாழ்ப்பாண மாவட் டத்தின் 15 பிரதேச செயலக பிரிவி லிருந்தும் பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். கூரை, கதவு, யன்னல், நிலம் மற்றும் சுவர் போன்ற பெரிய அளவிலான திருத் தங்களுக்கு தலா 3 லட்சம் ரூபா வும், கதவு , யன்னல் நிலம், சுவர் போன்ற பகுதி அளவிலான திருத் தங்களுக்கு தலா ஒன்றரை லட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

பட்டியலில் முன்னுரிமை அடிப்ப டையில் தெரிவுசெய்யப்படும் பய னாளிகளின் விவரங்களை தொழில்நுட்ப அலுவலரின் மதிப் பீட்டறிக்கையுடன், பிரதேச செயல ரின் சிபார்சுடன் அனுப்பி வைக்கு மாறு மாவட்டச் செயலகத்தால் பிரதேச செயலகங்களுக்கு அறி விக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## கிளி.வர்த்தக நிலையங்கள் மீது சுகாதாரப் பிரிவு திடீர் பாய்ச்சல்

கிளிநொச்சி, ஏப்.8

கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி வர்த்தக நிலையங்கள் மீது திடீர் பரிசோதனைகளை மேற்கொண் டனர்.

அதில் சந்தேகத்துக்கு இடமான நிலையில் சமையலுக்குப் பயன்ப டுத்தும் ஒரு தொகுதி எண்ணெய் பரல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் அவற்றின் மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. என்று தெரிவிக்கப்பட்டது (ச-9)





## டிப்பர்– கார் விபத்து

கிளிநொச்சி,ஏப்.8

டிப்பர் வாகனமும், காரும் மோதி விபத்துக் குள்ளானதில் கார் பெரிய அளவில் சேதங் களுக்குள்ளானதுடன், எவருக்கும் உயிர்ப் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக் கப்பட்டது.

இந்த விபத்து கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைக்கு முன்பாக நேற்று இடம்பெற் றது. கிளிநொச்சியிலிருந்து முறிகண்டி நோக்கி ஒரே திசையில் பயணித்த இரு வாக னங்களே விபத்துக்குள்ளாகின. விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-6)

## யாழைச் சேர்ந்த வாள்வெட்டுக் குழு வவுனியாவில் பெரும் அட்டகாசம்

வவுனியா, ஏப்.8

வாள்களுடன் வீட்டுக்குள் புகுந்த குழுவினர், வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தியதுடன், தளபாடங்களை யும் சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென் றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர் பில் பாதிக்கப்பட்டவர்களால் வவு னியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வவுனியா மூன்றுமுறிப்பு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள வீடொன் றில் வசித்து வந்த இளைஞன் மற் றும் யுவதியைத் தேடிய குழுவினர், அவர்கள் இருவரையும் காணாத நிலையில், வீட்டின் உரிமையாளரை அச்சுறுத்தியதுடன், வீட்டுத் தளபா டங்களையும் சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமை யாளரால் வவுனியா பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

இந்தச் சம்பவத்தை யாழ்ப்பாணத் தில் இருந்து வந்த வாள்வெட்டுக் குழுவினரே மேற்கொண்டனர் என் றும், காதல் விவகாரமே இதற்கு கார ணம் என்றும் முறைப்பாட்டில் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஐ-110,18)









## மாந்தை பகுதியிலும் விற்பனைச் சந்தை

மாந்தை,ஏப்.8

புத்தாண்டை முன்னிட்டு மாந்தை கிழக்கு பிரதேச செயலக வளாகத் தில் "அன்பான வணிகன்" எனும் தொனிப்பொருளில் மாபெரும் விற்பனைச் சந்தை ஒன்று நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலக மும், சமுர்த்தி திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் மாவட்ட சமுர்த்தி பணிப் பாளர், உதவிப் பிரதேச செயலர், உதவித் திட்டமிடல் பணிப்பா ளர்,உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சுடலை நெருப்பிலும் குளிர்காய்தல்

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் கோத்தாபய அரசுக்கு மிகச் சிறந்த அரசியல் ஆதாயத்தை தேடிக் கொடுத்திருந்தது. ஆட்சியைக் கைப்பற்றுவதற்கும் சரி, ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்கும் சரி அது உதவிக் கொண்டு இருக்கின்றது. தனது பிடிகளை இறுக்குவதற்கான ஆயுத மாக ஈஸ்டர் தாக்குதலை அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது.

அரச சார்பற்ற நிறுவனங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு வழி தேடிக் கொண்டிருந்த கோத்தா அரசுக்கு, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் வாய்ப்பாகியிருக்கின்றன.

அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் அதற்குரிய தேசிய செயலணியில் பதிவு செய்யப்படவேண்டும். பதிவுக்கு முன்பாக அவை தொடர்பில் பாதுகாப்பு அனுமதி பெறப்படவேண்டும். அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலணிக்கு அனுபவம் வாய்ந்த புலனாய்வாளர்களை இணைத்துக்கொள்ள வேண்டும் என்பது உள்ளிட்ட சுமார் 6 பரிந்துரைகள் வரையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் அரச சார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைக் கோத்தா அரசு கையிலெடுத்துள்ளது.

போரால் துவண்டு போயுள்ள மக்களுக்கு அரச உதவி என்பது 'யானைப் பசிக்கு சோளப்பொரி போன்றதே'. அரச சார்பற்ற நிறுவனங்களே வாழ்வாதார உதவிகள் தொடங்கி மக்களோடு பின்னிப் பிணைந்து பல்வேறு செயற்றிட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக இறுதிப் போரின் பின்னரான மக்களின் உள ஆற்றுகைப்படுத்தலை, அரச சார்பற்ற நிறுவனங்கள் மிகப் பெரிய சவாலுக்கு மத்தியில் முன்னெடுத்திருந்தன.

போரின் நேரடித் தாக்கத்தை சுமந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடான உதவிகள் என்பது வரப்பிரசாதம் போன்றதே.

மஹிந்த ராஜபக்ச காலத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான கெடுபிடிகள் இருந்தன. நல்லாட்சி அரசின் காலத்தில் அவை தளர்த்தப்பட்டன. இப்போது மீண்டும் இறுக்கங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. மஹிந்த காலத்தில் இருந்ததைவிட பன்மடங்கு அதிகரித்த கண்காணிப்புக் குள்ளேயே அரசசார்பற்ற நிறுவனங்கள் இப்போது உள்ளன.

இலங்கையில் ஆட்சியிலுள்ள ராஜபக்சக்களைப் பொறுத்த வரையில் 2014ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் வெளிநாட்டு சக்திகள் இருக்கின்றன என்று நம்புகின்றார்கள். அந்த சக்திகள் இங்குள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக தமது ஆட்சிக்கு எதிரான பரப்புரைகளை முன்னெடுத்தார்கள். அந்தப் பரப்புரைகளும் தமது வீழ்ச்சிக்கு காரணம் என்பது அவர்களுக்குத் தெரியும்.

இப்போது கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட அரச தரப்பினர் திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்ற விடயமும் அதுதான். 2014ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது போன்று பரப்புரைகள் ஊடாக ஆட்சி மாற்றத்துக்கு சர்வதேச சக்திகள் முனைகின்றன என்பதுதான்.

எனவேதான் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது கோத்தா அரசின் கழுகுப் பார்வை திரும்பியிருக்கின்றது. அந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் தேசிய செயலணியில் பதிவு செய்யவதுடன், வெளிநாடுகளிலிருந்து கிடைக்கின்ற நிதி உதவிகள் தொடர்பிலும் அனுமதி பெறப்பட வேண்டும். நிதி மூலம் தொடர்பில் அரசுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். அத்தகைய திட்டங்களுக்கு அனுமதியும் மறுக்கப்படலாம்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான இத்தகைய நெருக்குதல்கள் ஊடாக நேரடியாகப் பாதிக்கப்படப்போவது, போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள்தான். வெளிநாட்டு நன்கொடையாளர்களிடமிருந்து நிதிகளைப் பெற்றுக் கொள்வதில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஏற்படுத்தப்படும் தடைகள், அந்த நிறுவனங்கள் ஊடாக போர் பாதிப்பு பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களை முடக்கும்.

போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு தானும் உதவி செய்யாமல், உதவி செய்பவர்களுக்கும் முட்டுக்கட்டையைப் போடுகின்றது கோத்தா அரசு. பிணம் எரியும் சுடலை நெருப்பிலும் குளிர்காயும் பேய்களுக்கும், ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை வைத்து ஆதாயம் தேடும் அரசாங்கத்துக்கும் என்ன வித்தியாசம்?




# இராணுவம் எனப் பாசாங்கு காட்டி பெறுமதியான பொருள்கள் கொள்ளை

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஏப்.8

**இராணுவம் எனத் தெரிவித்து வீட்டுக்குள் சோதனை மேற்கொண்ட நபர்கள் வீட்டில் உள்ள பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.**

இந்தச் சம்பவம் வவுனியா பாரதிபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் பகல்வேளை இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

சொகுசு காரில் வந்த சில நபர்கள், தாம் இராணுவத்தினர் என அடையாள அட்டையைக் காட்டியதுடன், வீட்டில் சந்தேகத்துக்கிடமான பொருள்கள் இருக்கின்றன என தகவல் கிடைத்துள்ளது எனவும் வீட்டைப் சோதனை மேற்கொள்ளவுள்ளோம் எனத் தெரிவித்து, அங்கிருந்தவர்களை அச்சுறுத்தியதுடன், வீட்டினுள் காணப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் உள்ளிட்ட பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் இராணுவம், பொலிஸார் எனத் தெரிவித்து நான்கு வீடுகளில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-18)

# மகனைத் தேடிய தந்தை உயிரிழப்பு

வவுனியா, ஏப். 8

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடிவந்த தந்தை ஒருவர் சுகவீனம் காரணமாக நேற்று உயிரிழந்துள்ளார்.

வவுனியா தாலிக்குளம் பகுதியைச் சேர்ந்த சந்தணம் ராகவன் (வயது-65) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவரது மகன் ராஜ்குமார் 2008ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்துக் காணாமல் ஆக்கப்பட்டிருந்தார். தனது மகனைத் தேடி வந்த நிலையில் அந்தத் தந்தை நேற்று உயிரிழந்துள்ளார். (ஒ.110)

# சுகாதார வழிகாட்டுதல்களை முறையாக கடைப்பிடியுங்கள்

## இராணுவத் தளபதி வலியுறுத்து

கொழும்பு, ஏப்.8

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில், கொரோனாத் தொற்றைத் தடுக்க, சரியான சுகாதார வழிகாட்டுதல்களை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா வலியுறுத்தியுள்ளார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அடுத்த சில நாள்களில், மக்களின் நடத்தைகளைப் பொறுத்தே கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறையவும் அல்லது அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளது. கொரோனா தொற்றுவதற்கு முன்னர் எவ்வாறு நடந்துகொள்வது என்பது தொடர்பில், இலங்கை மக்களுக்கு நல்ல புரிதல் உள்ளது. அந்தப் புரிதல் இருப்பதால், அனைவரும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

மக்கள் சுகாதாரப் பழக்கங்களுக்கு ஏற்றவாறு புத்திசாலித்தனமாக செயற்படுவார்கள் என்று நம்புகிறோம்.

பாதிக்கப்பட்டவர்கள் சமூகத்தில் இருந்தால், அவர்களைத் தனிமைப்படுத்த அனைத்துப் பகுதிகளிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கராஜ வனத்தை சீனாவுக்கு விற்காதே

## ராஜபக்ச அரசுக்கு எதிராக ஐ.தே.க.வினர் கோசம்

**கொழும்பு, ஏப். 8**

**சிங்கராஜ வனத்தில் உள்ள காடுகளை அழித்து சீனாவின் உதவியுடன் இரண்டு மிகப் பெரிய நீர்த் தேக்கங்களை அமைக்க அரசு எடுத்துவரும் முயற்சி களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் முன்பாக ஐக்கிய தேசியக் கட்சியினால் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

போராட்டத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தன, கோத்தாபய அரசு சூழல் பாதிப்பு மட்டுமன்றி ஊழல் மோசடிகளிலும் ஈடுபட்டு வருகின்றது. இவர்களை அகற்றி விரைவில் நாம் ஆட்சிக்கு வருவோம். தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தவல்ல இரசாயனப் பதார்த்தம் பற்றிப் பேசப்பட்டது. பின்னர் பருப்பில் புற்றுநோய் பதார்த்தம் தொடர்பில் பேசப்பட்டது. தற்போது அரிசியில் சிக்கல்கள் இருக்கின்றன எனக் கூறப்படு கின்றது. இவ்வாறானதொரு நிலையில் நாட்டு மக்கள் புத்தாண்டை எப்படிக் கொண்டாடுவது? என்று கேள்வி எழுப்பினார்.

'நுரையீரல் இல்லாமல் உயிர்வாழ முடியாது. மரம் ஒன்று வெட்டப்படுகின்றது என்றால் எமது நுரையீரல் எம்மிடமிருந்து அகற்றப்படுகின்றது என்று எண்ணுங்கள். அப்போது காடழிப்பு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள முடியும்' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். (ஒ.இ)

---

# தமிழர்கள் கையேந்தவேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு

## வினோ. எம்.பி காட்டம்

கொழும்பு, ஏப்.8



தமிழ்மக்கள் தங்களிடம் கையேந்த வேண்டும், தங்களிடம் கெஞ்சவேண்டும் தங்கள் காலடிக்குள் வந்து விழவேண்டும் என்ற நிலையில் அரசு இருக்கின்றது என்று வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு பகுதிகளில் ஆசிரியர்கள் பற்றாக் குறையாக இருக்கின்றது. நாங்கள் ஆசிரியர்களை யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து இறக்குமதி செய்கின்றோம். அரச உத்தியோகத்தர்களை அதிகாரிகளை இன்று யாழ். மாவட்டத்தில் இருந்து எதிர்பாக்கின்ற நிலை இருக்கின்றது. இதில் மாற்றம் வேண்டும். கல்விச் செயற்பாடுகள் இங்கு வளர்த்துகொள்ளவேண்டும் நல்ல கல்வி சமூகம் இந்த கிராமங்களில் இருந்து உருவாக வேண்டும். அரசு எங்களை போரின்போது இறுதிக்காலத்தில் இடம் பெயரவைத்து மக்கள் அனைவரும் சோற்றுப் பாசலுக்காக தங்களிடம் கையேந்த வேண்டும் என்று நினைத்திருந்தது. அதையே செய்து முடித்தது. தமிழர்கள் அனைவரும் தங்களிடம் கையேந்த வேண்டும் என்ற நிலையை உருவாக்கிய அரசு தொடர்ந்தும், இனரீதியான செயற்பாடுகளுடன் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்கள் தங்களிடம் கையேந்த வேண்டும், தங்களிடம் கெஞ்ச வேண்டும் தங்கள் காலடிக்குள் வந்து விழ வேண்டும் என்ற நிலையில் இருக்கின்றார்கள். எங்கள் கிராமங்கள் அரசால் புறக்கணிக்கப் படுகின்றன. நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. தொல்பொருள் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், வன இலாகா திணைக்களம் என ஒவ்வொரு அமைப்பும் அரசின் முகவர்களாகச் செய்பட்டு வடக்கு, கிழக்கு மண்ணை அபகரிக்கத் திட்டமிட்டு பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அண்மையில் நாட்டின் ஜனாதிபதி வவுனியா வடக்கில் சிங்கள பிரதேசத்துக்குத் தான் பயணம் செய்தார். பெயரவில் வடக்குக்கு என்று சொல்லிக் கொண்டு அவர் சந்தித்த மக்கள் சிங்கள மக்களே - என்றார். (ப-19)

---

# பரிந்துரைகள் தொடர்பில் அரசு தீர்மானிக்கலாம்!!!

கொழும்பு, ஏப். 8



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவால் பரிந்துரைகளை மாத்திரமே முன்வைக்க முடியும். அது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றுவதும், நடைமுறைப்படுத்துவதும் அரசுக்குரியது. அதைச் செய்யுமாறு சகல தரப்பினரும் வலியுறுத்துகின்றனர். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புகாமி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு நடவடிக்கை எடுக்க அதிகாரம் இல்லை. பரிந்துரைகளை மாத்திரமே மேற்கொள்ள முடியும். சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் ஊடாகவே பரிந்துரைகளை நடைமுறைப்படுத் முடியும்.

ஆணைக்குழு முன்வைத்துள்ள பரிந்துரைகள் தொடர்பில் தீர்மானிக்கும் பொறுப்பு அரசுக்குரியது. அரசு தனது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான், பேராயர் உள்ளிட்ட நாட்டு மக்கள் அனைவரதும் கோரிக்கை என்றும் கூறினார். (ஒ.இ)

---

# அரசியலை பணமாக்கியதாலேயே ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன

## அமீர் அலி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.8

அரசியலை பணமாக்கியதாலேயே முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ். எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கல்குடா பிரதேசத்தில் ஒரு சில அரசியல் ஊழியர்கள் கல்குடா பிரதேசத்துக்கு துரோகம் செய்துள்ளனர். அத்தோடு உலமாக்கள் மற்றும் படித்தவர்கள் கல்குடா அரசியலுக்கு துரோகம் செய்துள்ளனர். இவர்கள் அரசியலை பணமாக்கியதன் காரணமாகவே, இத்தனை ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன. இந்த நாடு முஸ்லிம்களை சின்னா பின்னமாக்குகின்றது. இந்த ஆட்சியாளர்கள் முஸ்லிம்களை கேவலப்படுத்துகின்றனர். இன்னும் கேவலப்படுத்துவார்கள் - என்றார். (ப-150)

---

# பம்பலப்பிட்டியில் 5 சீனர்கள் கைது

கொழும்பு,ஏப்.8

விடுதியொன்றில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது, சீனப் பிரஜைகள் ஐவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

பம்பலப்பிட்டிப் பகுதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் கொள்ளுப்பிட்டி மற்றும் பம்பலப்பிட்டி பொலிஸார் இணைந்து நேற்றுமுன்தினம் நடத்திய சோதனை நடவடிக்கைகளின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் சட்டவிரோதமாக சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அங்கிருந்து 88 லட்சத்து 500 ரூபா மற்றும் 2 ஆயிரத்து 600 யுவான் பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பம்பலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப-4)

---

# இளைஞனின் சடலம் மீட்பு

கொழும்பு,ஏப்.8

வெட்டுக் காயங்களுடன் இளைஞன் ஒருவரது சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது. கொழும்பு கல்கிஸைப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 22 வயதுடைய கல்கிஸை பகுதியைச் சேர்ந்த இளைஞன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் களுபோவில போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப-4)

---

# அமைச்சர்கள் சொல்வதெல்லாம் சட்டங்களாக உருவாகாது!



## அமைச்சரவைப் பேச்சாளர் விளக்கம்

கொழும்பு, ஏப். 8

அமைச்சர்கள் தங்கள் அமைச்சுக்குரிய விடயதானங்களை முன்னிறுத்தி பல விடயங்களைக் கூறுவார்கள். அவை எல்லாம் சட்டமாக உருவாகாது. காலத்துக்கு எது தேவை, எது அவசியம் என்பனவற்றை ஆராய்ந்து அமைச்சரவையே அதைச் சட்டமாக்குவதா இல்லையா என்பது பற்றி முடிவு செய்யும். இவ்வாறு அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது ஊடகவியலாளர் ஒருவர், அமைச்சர் சரத் வீரசேகர புர்கா தடை மற்றும் இளையோருக்கு இராணுவப் பயிற்சி தொடர்பில் கதைத்திருந்தார். அவை நாட்டின் நடைமுறைப் பிரச்சினைகளைத் திசை திருப்புவதற்காகவா கூறப்பட்டன என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் ஒருவர் தனது அதிகாரிகளுடன் கலந்துரையாடித் தீர்மானம் இயற்றலாம். அமைச்சரவையில் அது முன்வைக்கப்பட்டால் அதனை உடனடியாக ஏற்றுக் கொள்ளவதா இல்லை காலம் தாழ்த்தி ஏற்றுக்கொள்வதா? என்பது தொடர்பில் அமைச்சரவை தான் முடிவு எடுக்க முடியும்.

அமைச்சர் ஒருவர் சமர்ப்பிக்கும் யோசனை சட்டமாக உருவாக்கப்படாது. அமைச்சரின் யோசனை அமைச்சரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றினாலே சட்டமாகும் என்றும் அவர் கூறினார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நௌபர் மௌலவி என்பவர் பிரதான சூத்திரதாரி அல்லர்

## உண்மையை கண்டறியுமாறு ஹக்கீம் வலியுறுத்து

**கொழும்பு, ஏப். 8**



**ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியாக நௌபர் மௌலவி இருக்கமுடியாது. உண்மையான பிரதான சூத்திரதாரிகள் கண்டறியப்படவேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையிலும் இவ்விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.**

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் 22 இணைப்புகள் உள்ளன. இங்கு 2 இணைப்புகள்தான் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 480 பேரிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றிருந்தாலும், 480 பேரிடமே சாட்சியங்கள் பெறப்பட்டுள்ளன.

அத்துடன், நௌபர் மௌலவி என்பவரே ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி என்று அமைச்சர் சரத் வீரசேகர தகவல் வெளியிட்டுள்ளார். என்னைப் பொறுத்தவரை பிரதான சூத்திரதாரி இன்னும் கண்டறியப்படவில்லை. பிரதான சூத்திரதாரிகள் இருக்கின்றனர். அது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி ஆணைக்குழுவும் பரிந்துரைத்துள்ளது. நிலைமை இப்படி இருக்கையில், பிரதான சூத்திரதாரி கண்டுபிடிக்கப்பட்டுவிட்டார் என்று அமைச்சர் சரத் வீரசேகர குறிப்பிடுகின்றார். அவர் ஒன்றைக் கூறுவதும் பின்னர் அதை மீளப்பெறுவதும் வழமை.

கதை, திரைக்கதை, வசனம், தயாரிப்பு என்று எல்லாமே நௌபர் மௌலவிதான் என்று அமைச்சர் கூற விளைகின்றார். நௌபர் மௌலவி திரைக்கதை எழுதியிருக்கலாம். அதில் பிரதான நடிகராக சஹ்ரான் இருந்திருக்கலாம். உப நடிகர்களும் இருந்திருக்கலாம். உப நடிகை சாரா என்பவர் காணாமல்போயுள்ளார். எனவே, தயாரிப்பாளர், இயக்குநர் யார் என்பது தான் முக்கியம். அதுவே கண்டறியப்படவேண்டும்.

அதேவேளை, ஐ.எஸ். அமைப்பின் பின்னால் செயற்படும் கரம் எது? அது தொடர்பில் உரிய வகையில் நாம் ஆராய்ந்தால் உண்மை வெளிச்சத்துக்கு வரும். மத்திய கிழக்கில் நாடொன்று இருக்கின்றது. அது 2ஆம் உலகப் போருக்கு பின்னர் மேற்குலக நாடுகளால் உருவாக்கப்பட்டதொன்றாகும். அந்த நாடுதான் இந்த அமைப்பின் பின்னணியில் செயற்படுகின்றது.

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை நாம் முழுமையாக நிராகரிக்கவில்லை. சிற்சில குறைப்பாடுகள் உள்ளன. எனவே, தாக்குதல் சம்பவத்தின் அடி முடி கண்டறியப்பட வேண்டும். நௌபர் மௌலவியுடன் இதனை முடித்துவிட வேண்டாம். அப்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்காது - என்றார். (ஒ,44)

# வர்த்தக நிலையங்கள் விசேட சோதனைக்கு

கொழும்பு,ஏப்.8

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, வர்த்தக நிலையங்கள் விசேட சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

நாட்டின் சகல மாவட்டங்களிலும், எதிர்வரும் 23 ஆம் திகதி வரை இந்த விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று அதிகார சபையின் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்துள்ளார்.

வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள காலாவதியான பொருள்கள் மற்றும் பாவனைக்குப் பொருத்தமற்ற பொருள்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-4)

# இஸ்ரேல் – இலங்கைக்கு இடையே நேரடி விமான சேவை

கொழும்பு,ஏப்.8

இஸ்ரேல் மற்றும் இலங்கைக்கு இடையிலான நேரடி விமான சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக குறிப்பிட்ட விமான சேவை தடைப்பட்டிருந்தது.

தற்போது இரு நாட்டுத் தூதரகங்கள் மற்றும் சுற்றுலா அமைச்சுக்களுக்கு இடையே இடம்பெற்ற பேச்சின் அடிப்படையில் விமான சேவையை மீள ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் அறிவுறுத்தலில், விமான சேவையை மீள ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ப-4)

# சீனத் தடுப்பூசி விச ஊசியே!!!

## எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஸ்மன் சாட்டை

கொழும்பு, ஏப்.8



சீனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட தடுப்பூசி ஒரு விஷ தடுப்பூசியே. இந்த ஊசிக்கு உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளிக்கவில்லை. மக்களுக்கு விஷம் கொடுத்து அழிக்கவா இந்தத் தடுப்பூசிகள் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்டன" இவ்வாறு எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தேசிய சுகாதார ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்னாள் உறுப்பினர்கள் பேராசிரியர் அசித டி சில்வா, டாக்டர் பாலித அபேகோன், லக்குமார பெர்னாண்டோ, கே.எம்.ஜி ஹேரத் மற்றும் மருத்துவர் கபில ரணசிங்க ஆகியோர் பதவியில் இருந்து நீக்கப்பட்டனர்.

சீனத் தடுப்பூசியை இலங்கைக்கு கொண்டு வருவதை இந்த மருத்துவர்கள் எதிர்த்ததாலேயே பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

'பிறப்பு கட்டுப்பாடு' என்ற ஒரு மருந்து ஜெர்மனியில் உருவாக்கப்பட்டது. இது எந்த சோதனையும் இல்லாமல் உலகம் முழுவதும் விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக இன்று சுமார் 500 ஆயிரம் ஊனமுற்ற குழந்தைகள் உள்ளனர் என்பதை நினைவூட்டுகிறேன் - என்றார். (ஐ-இ)

# மக்கள் பாவனைக்கு வருகிறது புறக்கோட்டை மிதக்கும் சந்தை

கொழும்பு,ஏப்.8

புறக்கோட்டை மிதக்கும் சந்தைத் தொகுதி மறுசீரமைக்கப்பட்டு, மீண்டும் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்படவுள்ளது.

2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் குறிப்பிட்ட சந்தைத் தொகுதியில், எந்த விதமான பராமரிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. 103 வர்த்தக நிலையங்களைக் கொண்ட இந்தச் சந்தைத் தொகுதியில், 80 வீதமானவை மூடப்பட்டிருந்தன. இவற்றை மீள மறுசீரமைப்பதற்கு 35 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது. தற்போது சந்தை புதுப்பொலிவுடன் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்படவுள்ளது. (ப-4)

# சேதனப் பசளைகளின் உற்பத்திக்கு நிதி ஒதுக்கீடு

கொழும்பு,ஏப்.8

நாட்டில் சேதனப் பசளைகளின் உற்பத்திக்காக ஒரு பில்லியன் ரூபா நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விசமற்ற விவசாய உற்பத்திகளை நோக்காகக் கொண்டு, சேதனப் பசளைகள் உற்பத்திகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பசளைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளன. உரக்கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் பசளைகள் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

அதேவேளை இரசாயன உரங்களை நாட்டுக்குள் இறக்குமதி செய்வதற்கு 35 பில்லியன் ரூபா நிதி வருடாந்தம் செலவிடப்படுகின்றது. அதனால் இந்தச் செலவைக் கட்டுப்படுத்தி, சேதனப் பசளை உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (ப-4)

# உள்ளூராட்சி மன்றங்களிலும் சிறப்பு மத்தியஸ்த சபைகள்

## உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப்.8

நாடு தழுவிய ரீதியல் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் நீதி அமைச்சுடன் இணைந்த வகையில் சிறப்பு மத்தியஸ்த சபைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று மாகாண சபைகள் [illegible] மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட வகைகளில் ஏற்படும் பிணக்குகளை உள்ளூராட்சி மட்டத்தில் தீர்ப்பதற்கும், நீதிமன்றங்களுக்கு செல்லும் பிணக்குகளின் எண்ணிக்கையை குறைக்கும் வகையிலும் மத்தியஸ்த சபைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக உள்ளூராட்சி சபைக்குட்பட்ட வகைகளில், ஏற்படும் பல்வேறுவகையான பிணக்குகளின் விவரங்களைத் தொகுத்து வழங்குமாறு மாகாண சபைகள் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சு நாடு தழுவிய 334 உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களைக் கடிதம் மூலம் கோரியுள்ளது. (ஐ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவராயன்கட்டுப் பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும்

## பெற்றோர் கோரிக்கை

**கிளிநொச்சி, ஏப்.8**
**கிளிநொச்சி பூநகரி பல்லவராயன்கட்டுப் பாடசாலையை மீள ஆரம்பிக்குமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் பெற்றோர் மேலும் தெரிவித்ததாவது;
உவர்ப் பரம்பலால் மூடப்பட்ட இந்தப் பாடசாலை 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரை விநாயகர் குடியிருப்பில் இயங்கி வந்தது. 2009 ஆம் ஆண்டின் பின்னர் இப்பாடசாலை மூடப்பட்டுள்ளது. பாடசாலையை மீள இயங்க வைப்பதன் மூலம் தற்போது பல்லவராயன்கட்டுப் பகுதியில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஜெயபுரம் மகா வித்தியாலயத்துக்குச் செல்கின்ற ஆரம்பப் பிரிவு மாணவர்கள் பல்லவராயன்கட்டு பாடசாலையில் கல்வி பயிலக் கூடிய நிலைமை ஏற்படும். இது தொடர்பில் பூநகரிக் கோட்டம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை என்பவற்றில் நேரில் சென்று பேசி, கோரிக்கைக் கடிதங்களையும் வழங்கியுள்ளோம். தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகிறோம் என்றனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது; பல்லவராயன்கட்டுப் பாடசாலையை இயங்க வைப்பதில் சமூகத்தின் பங்கு முதன்மையானது. பாடசாலையை மீள இயங்க வைக்க பெற்றோர் மற்றும் சமூகத்தவர்கள் முயற்சிக்கின்ற போது வலயக் கல்விப் பணிமனை அம் முயற்சிகளுக்கு துணை நிற்கும் என்றார். (வ-13)

# முதியவருக்கு தொற்று; பராமரித்த குடும்பங்களுக்கு தனிமை

சாவகச்சேரி, ஏப்.8
தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயது முதியவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அவரைப் பராமரித்த கைதடிப் பகுதியைச் சேர்ந்த இரு குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.
மட்டுவில் சந்திரபுரத்தைச் சேர்ந்த முதியவர் சுகவீனம் காரணமாக கடந்த 15 நாள்களாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்தே அவரை மருத்துவமனையில் வைத்து பராமரித்த இரு குடும்பங்கள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டனர். (ஐ-9)

# இரவு வேளையிலும் அம்புலன்ஸ் வண்டியின் சேவைகள் வேண்டும்

## ஐயன்குளம் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப். 8
முல்லைத்தீவு ஐயன்கன்குளம் மருத்துவமனையில் இரவு வேளைகளிலும், அம்புலன்ஸ் வண்டியை நிறுத்தி வையுங்கள் என்று முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் அந்தக் கிராமத்தின் பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.
இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
ஐயன்கன்குளம் மருத்துவமனையிலிருந்து 2019ஆம் ஆண்டு திருத்தத்துக்குச் சென்ற அம்புலன்ஸ் இதுவரை மருத்துவமனைக்கு திருப்பி அனுப்பப்படவில்லை. இந்த மருத்துவமனையில் இரவில் மருத்துவர் தங்குவதில்லை. 210 குடும்பங்கள் ஐயன்கன்குளத்திலும் 40 குடும்பங்கள் பழைய முறிகண்டியிலும், 85 குடும்பங்கள் புத்துவெட்டுவானிலும் வாழ்கின்ற நிலையில் இரவு வேளைகளில் ஐயன்கன்குளம் மருத்துவமனைக்குச் சென்றால் மருத்துவரும் இல்லை, அம்புலன்ஸ் வண்டியும் நிற்ப தில்லை, இதனால் 12 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி ஆதார மருத்துவமனைக்கு தமது சொந்த முயற்சியால் நோயாளர்கள் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். மக்களுடைய சிரமங்களைக் கருத்தில் கொண்டு, ஐயன்கன்குளம் மருத்துவமனையில் இரவு வேளைகளிலும், அம்புலன்ஸ் வண்டியை நிறுத்தி மக்களுக்கு சேவை வழங்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-13)

# நீர் சுத்திகரிப்பு நிலையம் மக்கள் பாவனைக்கு

மாந்தை, ஏப்.8
சப்ரி கம திட்டத்தின் கீழ், மாந்தை கிழக்குப் பிரதேச செயலக பிரிவில்



மூன்று முறிப்பு மற்றும் கரும்புள்ளியான் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் பொதுமக்களின் பாவனைக்கு வழங்கும் உத்தியோகபூர்வமாக நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இந்த நிகழ்வு பிரதேச செயலாளர் ந.ரஞ்சனா தலைமையில் நடைபெற்றது. இதில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர் கிராமமட்ட [illegible] பொதுமக்கள் என[illegible]டனர். (ற-9)

# மக்கள் நலன் வேண்டி விசேட பூசை வழிபாடு

யாழ்ப்பாணம், ஏப். 8
கொரோனாத் தாக்கத்திலிருந்து நாட்டு மக்கள் மீள்வதற்கு, இறை ஆசி வேண்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாதகல் நுணசை முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடு நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் இளம் சூடாமணி சக்தி உபாசகர் சிவஸ்ரீ இரங்க வரதராஜக் குருக்கள் கோபால கிஸ்ணக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளது. (வ-இ)

# பன்றித்தலைச்சி அம்மனில் 69,000 ரூபா பணம் திருட்டு

சாவகச்சேரி, ஏப்.8
மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் கோயிலுக்கு கடந்த திங்கட்கிழமை வந்த ஒருவரின் 69 ஆயிரம் ரூபா பணம் திருட்டுப் போயுள்ளது என்று சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
அந்த நபர் அர்ச்சனைப் பொருள்களை வாங்கி விட்டு அவற்றைக் கழுவுவதற்காக கைப்பையை அருகில் வைத்த போது அந்தக் கைப்பையில் இருந்த 69 ஆயிரம் ரூபா காணாமல் போயுள்ளது. இது தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரிடம் தெரியப்படுத்தியதையடுத்து அங்கிருந்த பொலிஸாரின் அறிவுறுத்தலின் கீழ் அந்த நபர் சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளார். (ற-9)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுகாதாரப் பிரிவின் அனுமதியின்றி யாழ். சாலையில் அரச பஸ் சேவை

## பொலிஸார் விசனம்

**யாழ்ப்பாணம், ஏப்.8**

**யாழ்ப்பாண நகரத்தில் சில வர்த்தக நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், சுகாதாரப் பிரிவின் அனுமதியைப் பெறாது அரச பஸ்கள் நகரத்தில் உள்ள சாலையில் இருந்து நேற்று தமது சேவைகளை நடத்தியுள்ளன.**



இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசனம் வெளியிட்டுள்ளனர். யாழ். நகர வர்த்தகர்களில் தொற்று உறுதி செய்யப்படாதோரின் கடைகளைத் திறக்க அனுமதி அளிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று காலையே அரச பஸ் சேவைகள் யாழ்ப்பாண நகரப் பகுதியில் உள்ள மத்திய பஸ் நிலையத்தில் செயற்படத் தொடங்கின.

எனினும் பொலிஸார் குறித்த செயற்பாட்டுக்கு தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் முகமாக கடந்த சில நாள்களாகப் பேணப்பட்டுவந்த நடைமுறையை இலங்கை போக்குவரத்துச் சபையினர் மீறியுள்ளனர், கட்டுப்பாட்டை மீறி அரச பஸ் சேவைகள் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து இடம்பெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். எனினும் தனியார் பஸ் சேவைகள் அனைத்தும் அண்மையில் திறக்கப்பட்ட நெடுந்தூர பஸ் நிலையத்தில் இடம் பெறுகின்ற நிலையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் மாத்திரம் யாழ். நகரப் பகுதியில் சுகாதாரப் பிரிவின் அனுமதி பெற்றுக் கொள்ளாத நிலையில் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ப-20)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் தனியார் வகுப்புகளுக்குத் தடை

சாவகச்சேரி ,ஏப்.8

தென்மராட்சி பிரதேசத்தில் தரம்5 , க.பொ.த.சாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகிய வகுப்புக்களைத் தவிர்ந்த ஏனைய வகுப்பு மாணவர்களுக்கு தனியார் கல்வி நிறுவனங்களில் நடத்தப்படும் வகுப்புகள் நடத்த மறு அறிவித்தல் வரை தடைசெய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறி வகுப்புகள் நடத்தும் கல்வி நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன்,வகுப்பை நடத்திய ஆசிரியர், வகுப்புகளுக்குச் சென்ற மாணவர்கள் ஆகியோர் அவர்களது குடும்பங்களுடன் நோய்த் தடுப்புச் சட்டத்தின் கீழ் தனிமைப்படுத்தப்படுவர் என்று சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். நாட்டில் தற்போது அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றுக் காரணமாக தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பான சுற்றறிக்கை. கொழும்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு தென்மராட்சி பிரதேசத்தில் தரம் 5, க.பொ.த.சாதாரண தரம் மற்றும் உயர்தர வகுப்புகளை நடத்தும் தனியார் கல்வி நிறுவனங்கள், சுகாதார விதி முறைகளைக் கடைப்பிடித்து மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களுடன் வகுப்புகளை நடத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-9)

# தமிழ் தெரிந்த பொலிஸார் இதுவரை கடமையில் இல்லை

## மக்கள் அவதி

வவுனியா, ஏப்.8


வவுனியா நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழி தெரிந்த பொலிஸார் கடமையில் இல்லாததால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

நெளுக்குளம் பொலிஸ் நிலைய பிரிவு உட்பட வவுனியா மாவட்டத்தில் வாழும் பொதுமக்களில் 80 வீதமான தமிழ் மொழி பேசுவோரே.

இந்நிலையில் வவுனியா நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழி தெரிந்த பொலிஸார் கடமையில் இல்லை.

பொலிஸ் நற்சான்றிதழ், வாக்கு மூலம் பதிவு , தண்டப்பத்திரம் , முறைப்பாடு போன்றவற்றுக்கு பெரும்பான்மை இன மொழி பேசும் பொலிஸாரே கடமையில் ஈடுபட்டுள்ளனர். இதனால் மக்கள் தங்களது தேவைகளை நிவர்த்திசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தொலைபேசியூடாக முறைப்பாட்டை வழங்கும் போது பெரும்பான்மை சிங்கள மொழியில் பொலிஸார் பேசுவதால் அவசர தேவையையும் மக்களால் நிவர்த்தி செய்ய முடியவில்லை.

கடந்த காலங்களில் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய தமிழ் மொழி பேசும் பல பொலிஸாருக்கு வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. அத்தோடு அதிக அளவில் தமிழ் மொழி பேசுவோர் வாழும் பகுதிகளில் பெருமான்மை சிங்கள மொழி பேசும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-18)



# பொலிஸார் அசமந்தம்

வவுனியா, ஏப். 8

விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்ற முச்சக்கர வண்டி தொடர்பில் விவரங்களை வழங்கிய போதும் பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்யவில்லை என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

வவுனியா குருமன்காட்ப் பகுதியில் கடந்த 4ஆம் திகதி இரவு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரை, முச்சக்கர வண்டி மோதியதாகக் கூறப்படுகின்றது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் முச்சக்கரவண்டி சம்பவ இடத்தில் நிற்காமல் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. விபத்துத் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட போதும் தாமதமாகவே அவர்கள் வந்தனர் என பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் விபத்தை ஏற்படுத்திய முச்சக்கர வண்டியின் இலக்கம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட போதும் இதுவரையில் தப்பிச் சென்ற முச்சக்கரவண்டிச் சாரதியைப் பொலிஸார் கைது செய்யவில்லை என்றும் அவர்கள் குற்றம்சுமத்துகின்றனர். (ஒ.இ)

# வலி. வடக்கு மீள்குடியேற்றத்துக்கு அயராது உழைத்தவர் சிவஞானசோதி

யாழ்ப்பாணம், ஏப். 8

வலி. வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து காணிகளை விடுவிப்பதிலும், விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்களுக்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும் மிகப் பெரிய சேவையாற்றியவர் சிவஞானசோதி அவர்கள். அவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது.

இவ்வாறு வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம் விடுத்துள்ள அனுதாபச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் அ. குணபாலசிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வலி. வடக்கு மக்களின் காணிகள் விடுவிக்கப்படுவதற்கு முக்கியமானவர்களுள் சிவஞானசோதியும் ஒருவர். அவர் அரச அதிகாரி என்பதைத் தாண்டி தனது மக்களுக்காக அரும்பாடுபட்டவர்.

காணிகளை விடுவித்தமை மாத்திரமல்ல, மக்களுக்குரிய வீடமைப்பு, வீதிப் போக்குவரத்து என்பவற்றும் வாழ்வாதாரத்துக்காகவும் பல உதவிகளைப் பெற்றுத் தந்தவர். அவரின் திடீர் மறைவு எம்மைக் கண் கலங்க வைக்கின்றது.

அவரது குடும்பத்துக்கு வலி. வடக்கு மக்கள் சார்பில் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (ஒ.இ)

# சிவஞானசோதியின் மறைவு புலமைத்துவ பரப்பில் இடைவெளி



## மஸ்தான் எம்.பி அனுதாபம்

வவுனியா, ஏப்.8

இலங்கை நிர்வாக சேவையின் மூத்த ஓய்வு நிலை அதிகாரி சிவஞானசோதி யின் மறைவு தமிழ்த் தேசியப் பரப்பில் மாத்திரமன்றி முழு இலங்கையின் புலமைத்துவப் பரப்பிலும் பெரும் இடைவெளியை தோற்றுவித்துள்ளது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார். சிவஞானசோதியின் மறைவு குறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் உள்ளதாவது; தான் வகித்த உயரிய பதவிகள் மூலம் அனைத்து மக்களுக்குமான மகத்தான சேவைகளை மனித நேயத்துடன் சிவஞானசோதி ஆற்றியிருந்தார். எப்பொழுதும் மக்களுக்கு உதவிடும் உயர்ந்த குணம் கொண்டிருந்த அவர் நேரகாலம் பாராது மக்களுக்காக உழைத்து வந்தார். நான் பிரதி அமைச்சராகப் பதவி வகித்த காலங்களில் பல்வேறு பட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு திட்டங்களை வகுப்பதில் எனக்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டதுடன் அதற்குப் பின்னரான காலங்களிலும் நான் மேற்கொண்ட பல்வேறு அபிவிருத்திகள் தொடர்பில் தனது ஆலோசனைகளை வழங்கி அவற்றை மேம்படுத்தவும் இன்னும் செயற்றிறன் மிக்கதாக விருத்தி செய்யவும் தனது வாண்மைமிக்க பங்களிப்பையும் நல்கினார்.

தனது ஓய்வு நிலைக்கு பின்னரான காலப் பகுதியில் பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினராகவும் சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளராகவும் பதவி வகித்து நாட்டின் கீர்த்திக்கு வலுச் சேர்த்தார். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினர் நண்பர்கள் புலமையாளர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள் என்றுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லாட்சி அரசின் பலவீனமே ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணம்

## கெஹலிய திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 8
நல்லாட்சி அரசின் பலவீனத்தாலே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நாட்டில் இடம்பெற்றது. இந்தத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குற்றவாளிகளாக இனம் காணப்பட்டுள்ளவர்களை காப்பாற்றும் தேவை அரசுக்குக் கிடையாது. இவ்வாறு அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை உபகுழுவால் கையளிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் குற்றவாளிகளாக அடையாளம் காட்டப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு சட்டமாஅதிபரைச் சார்ந்தது. அவரின் செயற்பாடுகளில் அரசியல் அழுத்தம் பிரயோகிக்கவேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது.

தேசிய பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் வகையிலும், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் போன்று பிறிதொரு தாக்குதல் இடம்பெறாத வகையிலும் புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பு கம்பஸ் தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை. அதனை அரசுடமையாக்குவதா அல்லது தனியார் மயப்படுத்துவதா என்பது தொடர்பில் பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன- என்றார். (ஒ.இ)

# ஆயுதங்களுடன் கைதானவர்கள் மைத்திரியின் உத்தரவில் விடுவிப்பு

## சமல் ராஜபக்ச தெரிவிப்பு



**கொழும்பு, ஏப். 8**

**புத்தளம் வனாத்தவில்லுப் பகுதியில் ஆயுதங்களுடன் 4பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவில் விடுவிக்கப்பட்டனர். மைத்திரிபால இவர்களை விடுவித்தாரா? அல்லது இந்த விடுவிப்பில் ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளனவா என்பது தெரியவில்லை. —**

இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் ஆராய்வதற்கு அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது. உப குழு தனது அறிக்கையை கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியிடம் ஒப்படைத்தது. அந்தக் குழுவின் ஆராய்வுகள் தொடர்பில் அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் சமல் ராஜபக்ச விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசின் காலத்தில் நீதி அமைச்சராக இருந்த விஜயதாஸ ராஜபக்ச, 2016ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தகவல் ஒன்றை வெளியிட்டிருந்தார். இலங்கையில் இஸ்லாமிய தேசத்தை உருவாக்கும் நோக்கில் சில தரப்பினர் சிரியாவில் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்றுள்ளனர் என்று குறிப்பிட்டார். அவரது கருத்துக்கு ஆளும் கட்சிக்குள் இருந்தே எதிர்ப்பு வெளியிடப்பட்டது. 2018ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி மாவனெல்லவில் புத்தர் சிலை உடைக்கப்பட்டது. கேகாலை பொலிஸ் அதிகாரி கமல் பெரேரா முழுமையான விசாரணை நடத்தினார். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைதாகி விடுவிக்கப்பட்டனர். பின்னர் இந்த விசாரணை இடைநிறுத்தப்பட்டது. அது தொடர்பிலும் ஆராயப்படவேண்டும். 2019ஆம் ஆண்டு புத்தளம் வனாத்தவில்லுப் பகுதியில் பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. 4பேர் கைதாகினர். இருவர் மைத்திரிபாலவின் உத்தரவில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பிலும் முழுமையாக ஆராயப்பட வேண்டும். காத்தான்குடிப் பிரதேசத்தில் மத முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளன என்று தெரிவித்து சஹ்ரானைக் கைது செய்யுமாறு பல தரப்பினரும் சட்டமா அதிபர் திணைக்களம், ஜனாதிப்தி செயலகம் என்பனவற்றில் முறையிட்டுள்ளனர். ஆனால் இது தொடர்பில் எவரும் கைது செய்யப்பட வில்லை. நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைதூக்கியிருந்ததை பொலிஸார் அறிந்திருந்தாலும், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் வரையில் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. பொலிஸ் அதிகாரிகள் அதிகாரங்களை முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளனர். இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் 18 வயதுக்கு குறைவான பிள்ளைகள் இருந்தால், அவர்களுடைய கற்றல் நடவடிக்கைகளுக்கு உதவி செய்யும் யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது, என்றார். (ஒ.இ)

# பாம் எண்ணெய் இறக்குமதிக்கு சிறப்பு அனுமதி

கொழும்பு,ஏப்.8
பேக்கரி உரிமையாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக, பாம் எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கு சிறப்பு அனுமதி வழங்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பிஸ்கட் மற்றும் பேக்கரி உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திச் செயல்முறைக்கு, பாம் எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இலங்கையில் பாம் எண்ணெய் இறக்குமதிக்கான தடை உத்தரவு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் அண்மையில் அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து பேக்கரி உரிமையாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். தற்போது அவர்களுக்கு சிறப்பு அனுமதி வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது என்றார். (ப-4)



# நீண்டகாலப் பிரச்சினை இப்போதே அம்பலமாகியது

## எண்ணெய் விவகாரம் தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளர் கருத்து

கொழும்பு, ஏப். 8
எண்ணெய் விவகாரம் தொடர்பான பிரச்சினை மிக நீண்டகாலமாக இருந்து வந்தது. அது இப்போதாவது மக்களுக்குத் தெரியவந்துள்ளது. இந்த உண்மை வெளிப்படுத்தப்பட்டிருக்காவிடின் என்ன நடந்திருக்கும்? இவ்வாறு அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல கேள்வி எழுப்பினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாம் எண்ணெய் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்குமாக இருந்தால், வர்த்தமானி ஊடாக கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்படும்.

எண்ணெய் பிரச்சினை இன்று நேற்றுத் தோன்றியதல்ல. நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இப்போது அம்பலப்படுத்தப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட தேங்காய் எண்ணெய் எங்கிருந்து கொண்டு வரப்பட்டது என்பதை விட ஏனைய காரணிகளே முக்கியமானவை, என்றார். (ஒ.இ)

# 150 பஸ்களின் அனுமதி ரத்து

பஸ்களின் இருக்கைகளுக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில், 150 பஸ்களின் அனுமதிப் பத்திரங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா அச்சுறுத்தலான காலப்பகுதிகளில் சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை, பயணிகள் சேவையில் ஈடுபட்ட குறிப்பிட்ட பஸ்களின் சாரதிகள்,நடத்துநர்கள் பின்பற்றவில்லை. நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது, 150 பஸ்களின் அனுமதிப் பத்திரங்கள் இவ்வாறு ரத்துச் செய்யப்பட்டுள்ளன. (ப-4)

# தே.எண்ணெய் கொள்கலன்களை மலேசியாவுக்கு அனுப்ப ஏற்பாடு

நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட 6 தேங்காய் எண்ணெய் கொள்கலன்களையும், எதிர்வரும் 13 ஆம் திகதி மலேசியாவுக்கு திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. தனியார் நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் கொள்கலன்களில், புற்றுநோயை ஏற்படுத்தும் பதார்த்தம் இருப்பது பரிசோதனையில் கண்டறியப்பட்டது. அதனையடுத்து அவற்றை மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுமார் 377 மில்லியன் ரூபா பெறுமதியான தேங்காய் எண்ணெய் இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டது. குறிப்பிட்ட கொள்கலன்கள் கொழும்பு துறைமுக புறப்பாடு முனையத்துக்கு தற்போது அனுப்பப்பட்டுள்ளன. அங்கிருந்து மலேசியாவுக்கு அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறங்கி ஆற்றில் தொடர்கிறது சட்டவிரோத மணல் அகழ்வு

## தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை



**மன்னார், ஏப்.8**
**மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பறங்கி ஆற்றில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகிறது எனப் பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.**

இந்த சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் தெரிவித்துள்ளதாவது;

சட்டவிரோத மணல் அகழ்வால் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. பறங்கி ஆற்றுப் பகுதிக்கு மாவட்டச் செயலகத்தின் அதிகாரிகள் வந்து பார்வையிட்ட பின்னும் இந்த சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகிறது. உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனமெடுத்து தடுத்து நிறுத்த வேண்டும்.

அத்துடன் மணல் அகழ்வு தொடர்பாக குழு ஒன்றை ஆரம்பித்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மணல் அகழ்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் உள்ளூரில் வசிக்கும் பொது மக்கள் அதிக விலை கொடுத்து மணலைப் பெற வேண்டியுள்ளதால் மணலுக்கு நிர்ணய விலையை தீர்மானிக்க வேண்டும் என்றனர். (வ-213)



# பொருண்மியம் நலிவடைந்த குடும்பம் ஒன்றுக்கு வீடு

## அடிக்கல் நட்டது இராணுவம்

உடுவில்,ஏப்.8
உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே /182 கிராம அலுவலர் பிரிவில் புத்தசாசன அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இராணுவத்தால் அமைக்கப்படவுள்ள வீட்டுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. குறித்த வீட்டுக்கான அடிக்கல்லை யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி ஜெனரல் பிரியந்த பெரோரா நட் டார்.

தேசிய வெசாக் தினத்தை முன்னிட்டு நயினாதீவில் இரண்டு வீடுகளும், தெல்லிப்பழை மற்றும் உடுவில் ஆகிய இடங்களில் தலா ஒவ்வொரு வீடுமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நான்கு வீடுகள் பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு கட்டிக் கொடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-20)

# இலங்கை அரசின் தடைக்கு பிரிட்டன் தமிழர்கள் எதிர்ப்பு

கொழும்பு,ஏப்.8
இலங்கை அரசால், புலம்பெயர் அமைப்புக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பிரிட்டன் தமிழ் அமைப்புகள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

பயங்கரவாத சட்டத்தின் கீழ் இலங்கையில் வசிக்கும் 35 பேர் உட்பட 300 க்கும் மேற்பட்டவர்களுக்கும், உலகெங்கிலும் உள்ள பல புலம்பெயர் அமைப்புக்களுக்கும் இலங்கை அரசு அண்மையில் தடை விதித்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தமிழர்களின் நீதி மற்றும் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும், பிரிட்டன் தமிழ் அமைப்புக்கள் போராட்டங்களை முன்னெடுக்க வுள்ளன.

இலங்கை அரசின் தடை எங்களுக்கு ஆச்சரியமான அவ் ஒன்றல்ல. தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நாம் தொடர்ந்தும் குரல் கொடுப்போம் என்று அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (ப-4)



வவுனியா தாண்டிக்குளத்தில் அமைந்துள்ள அருள்மிகு அற்புத ஐயனார் ஆலயத்தில் மணவாளக்கோல உற்சவம் நேற்று நடைபெற்றது. (வ-110)



# பருத்தித்துறையில் சுகாதாரப் பிரிவு நேற்று திடீர் சோதனை நடவடிக்கை

பருத்தித்துறை, ஏப்.8
பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் பருத்தித்துறைப் பகுதிகளில் உணவுப் பாதுகாப்பு மற்றும் கொவிட்19 கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பரிசோதனை நடவடிக்கையில் உணவுத் தயாரிப்பு மற்றும் விநியோகத்தின் போது சுகாதார நடைமுறைகளை மீறுவோர் மீதும், காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்காக வைத்திருப்பவர்கள் மீதும் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. அந்த வகையில் குறித்த பரிசோதனைகளின்போது, கொவிட் 19 சுகாதார நடைமுறைகளைமீறிய வர்த்தக நிலைய உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர். தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்தது.

குறிப்பாக சமூக இடைவெளியைப் பின்பற்றாத மற்றும் முகக்கவசத்தை சரியாக அணியாத வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் மீதும், கொவிட்19 கட்டுப்பாடுகளை மீறி பொதுப்போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவோர் மீதும் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த ஆபத்தான சூழ்நிலையை ஏற்படுத்தும் வர்த்தக நி[illegible]களுக்கு எதிர்வரும் நாள்களில் சீல்வைக்கவு[illegible]கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று [illegible] பட்டுள்ளது.

# திறன் அபிவிருத்தி வகுப்பறைகளின் செயற்பாடுகள் மன்னாரில் ஆரம்பம்

மன்னார், ஏப்.8
மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்ட நான்கு திறன் அபிவிருத்தி வகுப்பறைகளின் செயற்பாடுகள் நேற்றுப் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

மாணவர்களின் கல்வித் தேர்ச்சியை அதிகரிக்கும் முகமாகவும், நவீன தொழில் நுட்ப முறைகள் மூலம் கற்கைகளை மேற்கொள்ளவு மென இந்தத் திறன் அபிவிருத்தி வகுப்பறைகளின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சித்திவிநாயகர் தேசிய பாடசாலையின் லண்டன் பழைய மாணவர்கள் சங்கம் மற்றும் மனிதநேய நம்பிக்கை நிதியத்தின் நிதி ஒதுக்கீட்டில் பாடசாலைப் பிரதி அதிபர் பி.எல். குரூஸ் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் கே.ஜே.பிறட்லி இந்த வகுப்பறைகளை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். (ற-56)



# உதவித் தொகைக்கு விண்ணப்பியுங்கள்

முல்லைத்தீவு, ஏப்.8
முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி பொருண்மிய பின்னடைவு நிலை காரணமாக கற்றலைத் தொடர முடியாத நிலையிலுள்ள மாணவர்களிடமிருந்து உதவித் தொகை வழங்குவதற்கான விவரம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்விக்கும் அபிவிருத்திக்குமான நம்பிக்கை நிதியத்தால் கோரப்பட்டுள்ளது. உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க விரும்பு வோர் எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலுள்ள கல்விக்கும் அபிவிருத்திக்குமான நம்பிக்கை நிதியத்தில் விவரத்தைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறலில் இருந்து நழுவுவது ஏற்புடையதல்ல

## முன்னாள் இராணுவ அதிகாரி இலங்கைக்கு ஆலோசனை

கொழும்பு.ஏப்.8
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் தொடர்பில், இலங்கை ஐக்கியப்பட்டு ஒரு மித்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். பொறுப்புக் கூறலில் இருந்து விலகுவது பொருத்தமற்ற விடயம். இவ்வாறு முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சகி கலகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஜெனிவா விவகாரத்தில், இலங்கையில் என்ன நடந்தது என்ற உண்மையை தெரிவிப்பதற்கு தாமதமின்றி அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

எங்கள் கருத்துக்களை முன்வைப்பதற்கு இன்னுமொரு வாய்ப்புக் கிடைக்காது. நாங்கள் பொறுப்புக் கூறல் விடயத்தை திறந்த மனதுடன் அணுகவேண்டும். விசாரணைப் பொறிமுறை தொடர்பில் மாற்றுக் கருத்துக்கள் இருக்கக் கூடாது. சர்வதேச நீதிமன்றின் முன்னால் இலங்கையைக் கொண்டுசெல்ல முடியாது என்பதற்காக, இலங்கை விடயங்களை அலட்சியப் படுத்த முடியாது. போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பான விவகாரங்களைக் கையாள்கின்றவர்கள், இறுதிப் போர் தொடர்பிலும் கவனம் செலுத்துகின்றனர்.

போர் முடிவடைந்து ஒரு தசாப்தத்தின் பின்னரும், இலங்கை தன்மீதான குற்றச்சாட்டுகளை வெற்றிகரமாக நிராகரிக்கத் தவறியுள்ளமை, மிகப்பெரும் தியாகத்தைச் செய்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் செய்யப்பட்ட அவமானம்- என்றார். (ப-4)



யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்துள்ள தமிழாராய்ச்சி மாநாட்டின் படுகொலை நினைவுத்தூபியின் சீரமைப்புப் பணிகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ-319,320)

# தேயிலை மீள் பயிரிடலுக்கான மானியத் தொகை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 8
**தேயிலை மீள்பயிரிடலை ஊக்குவிப்பதற்காக ஹெக்டேயருக்கு இதுவரை 4 லட்சம் ரூபா மானியமாக வழங்கப்பட்டு வந்த நிலையில் அதனை 5 லட்சம் ரூபாவாக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

2019ஆம் ஆண்டு இலங்கையின் மொத்தத் தேயிலை உற்பத்தி 300 மில்லியன் கிலோ எனவும், அதில் 225 மில்லியன் கிலோ தேயிலை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களால் உற்பத்தி செய்யப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேயிலை உற்பத்தியை உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்கு சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களை ஊக்குவிக்க வேண்டியுள்ளது.

தேயிலை மீள் பயிரிடல் மூலம் வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு 4 ஆண்டுகள் வரை செல்கின்றன.

அதற்குப் பெருமளவு செலவாகின்றது. இதனால் தேயிலை மீள் பயிரிடலில் தோட்ட உரிமையாளர்கள் ஆர்வமில்லாமல் உள்ளனர்.

2025 ஆம் ஆண்டு 360 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி என்ற இலக்கை அடைவதற்கு தோட்ட உரிமையாளர்களுக்கு போதிய அளவு ஊக்குவிப்பு வழங்கப்பட வேண்டும் என்பதாலேயே இந்த மானிய அதிகரிப்புக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஒ.இ)

# ஆயிரம் ரூபா சம்பளம் ஏப்ரல் முதல் கிடைக்கும்

## அமைச்சர் ரமேஸ் பத்திரன தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 8
பெருந்தோட்டக் கம்பனிகளுடன் பேச்சு நடத்தி அது வெற்றியளிக்கவில்லை. சம்பள நிர்ணய சபை ஊடாக ஆயிரம் ரூபா அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அதற்கு எதிராக கம்பனிகள் தாக்கல் செய்த வழக்கு தோல்வியடைந்துள்ளது. எனவே இந்த மாதத்திலிருந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவு கிடைக்கும். இது அரசுக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும். இவ்வாறு பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஸ் பத்திரன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வில், அரசு அறிவித்த ஆயிரம் ரூபா கொடுப்பனவை அரசு நிர்வகிக்கும் தோட்ட நிறுவனங்களும் வழங்கவில்லையே என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வருண லியனகே கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், இந்த மாதத்திலிருந்து சகலருக்கும் ஆயிரம் ரூபா கொடுப்பனவு கிடைக்கும். இதனை சகல நிறுவனங்களும் வழங்கவேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளன - என்றார். (ஒ.இ)

# பெண்கள் சிறைக்குள் எறிந்த பொதி சிக்கியது

கொழும்பு, ஏப். 8
வெலிக்கடைச் சிறைச்சாலையின் பெண்கள் பிரிவை நோக்கி எறியப்பட்ட பொதி சிறைச்சாலை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அந்தப் பொதியை விசாரணைகளுக்காக பொரளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனசிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அந்தப் பொதியிலிருந்து 9 கைத்தொலைபேசிகள், 5 சிம் அட்டைகள். 14 பற்றரிகள், 8 சார்ஜர்கள், 10 புகையிலைத் துண்டங்கள், 20 வெற்றிலைகள், 2 தீப்பெட்டிகள், பாக்கு மற்றும் சுண்ணாம்பு என்பவை மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

# இன்றைய நாள்

**மேடம்:** பணியில் இருந்த மந்த நிலை மாறும். கோபம் குறையும். விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமாக நல்ல பெயர் எடுப்பீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை குறையும்.

**இடபம்:** பதவி உயர்வோடு வேறு இடங்களுக்கு மாற்றல் கிடைக்கக்கூடும். உடன் பணிபுரிபவர்களுடன் சுமுகமாக பழகி மகிழ்வீர்கள். உதவி கிடைக்கும்.

**மிதுனம்:**இத்தனை நாள்களை விட அதிக வழிபாடு செய்வீர்கள். சிக்கலைத் தவிர்க்க சுலப வழி கண்டறிவீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**கடகம்:** அடைக்க வேண்டிய கடன் உங்களை அவசரப்படுத்தி முடிக்க வைக்கும். மற்றவர் சிரமத்தைப் புரிந்து கொண்டு கருணை காட்டுவீர்கள். விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**சிம்மம்:**அக்கம் பக்கத்தினரிடம் சுமுகமாக நடந்து கொண்டு வசீகரிப்பீர்கள். முயற்சியின் பேரில் குடும்பத்தில் பொருளாதார சிரமங்கள் தீரும். அலைச்சல் இருக்கும்.

**கன்னி:** விரும்பிய இடமாற்றமும் பதவி உயர்வும் கிடைக்கும். அதிகாரம் செய்வீர்கள். நின்றுபோன பணியைத் ஆரம்பிப்பீர்கள். பணியில் இதுவரை இருந்து வந்த இறுக்கமான நிலை மாறும்.

**துலாம்:** பல நாள்களுக்குப் பிறகு சுய தேவையை நிறைவு செய்து கொள்வீர்கள். தொழில், பணியில் உள்ள ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். கடன் தொல்லையில் இருந்து விடுபடுவீர்கள்.

**விருச்சிகம்:** குழந்தைகளின் ஆசையை நிறைவேற்றி மகிழ்விப்பீர்கள். மற்றவர்களைப் பார்த்துப் புதிய விஷயங்களைக் கற்பீர்கள். உங்களின் அந்தஸ்து உயரும். வீட்டை விரிவாக்குவீர்கள்.

**தனுசு:** உங்களின் புதிய திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்வீர்கள். குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். பணிச்சுமை குறையும். சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

**மகரம்:** உழைப்பை அதிகரிப்பீர்கள். உடல்நலம் மேம்படும். மற்றவர் சொல்லும் விமர்சனம் பற்றிக் கவலை வேண்டாம். பிரியமானவர்களிடம் நேற்று இருந்த சச்சரவுகள் நீங்கும்.

**கும்பம்:** வாழ்வின் சுக சௌகர்யங்களை அதிகரித்துக் கொள்வீர்கள். மனம் சந்தோஷம் அடையும்படியான சம்பவங்கள் நடைபெறும். சிக்கல் ஏற்படுத்தும்படியான விவாதங்கள் வேண்டாம்.

**மீனம்:** முன்பு செய்த குற்றங்கள் தலைதூக்க வாய்ப்புள்ளது. உங்களை மற்றவர்கள் புதிர்போல் பார்ப்பார்கள். பகை நீங்கும். பிள்ளைகளிடம் இருந்து நற்செய்தி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கடன்களை இரத்துச் செய்க

## மக்கள் போராட்டம்

கொழும்பு,ஏப்.8

அனைத்து நுண்கடன்களையும் இரத்துச் செய்யக் கோரி, ஹிங்குராங்கொடவில் நேற்றுமுன்தினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஹிங்குராங்கொட பிரதான வீதியூடாக முன்னெடுக்கப்பட்ட பேரணியால், வீதியின் போக்குவரத்துக்கள் சில மணித்தியாலங்கள் தடைப்பட்டன. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஒன்று கூடிய மக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நுண்கடன்களால் தினமும் பெருமளவான பெண்கள் தற்கொலை செய்கின்றனர். எனவே பெண்களைப் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். நுண்கடன் திட்டத்தை இரத்துச் செய்யக் கோரும் பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர். (ப-4)

# இந்தியப் பிரஜையின் உயிரிழப்பில் சந்தேகம்

## விசாரணை கோகிறது ஜே.வி.பி.

கொழும்பு,ஏப்.8

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இந்தியப் பிரஜை உயிரிழந்தமை சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. எனவே வெளிப்படையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

குளியாப்பிட்டியில் புத்தரின் சிலைகளைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் குறித்த இந்தியப் பிரஜை கடந்த மாதம் 19 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவர் சுவாசப்பிரச்சினைகளை எதிர்கொண்டதால், வாரியபொல மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் உயிரிழந்தார். (4)

# ஓய்வின்றி மக்களுக்காக உழைத்த மாபெரும் மனிதனை இழந்துவிட்டோம்

## சிவஞானசோதியின் மறைவுக்கு மாவை.சோ.சேனாதிராசா இரங்கல்



யாழ்ப்பாணம், ஏப். 8

தனது பணிக்காலங்களில் ஓய்வு உறக்கமின்றி, மக்கள் சேவைக்கு முழுமையாகத் தன்னை அர்ப்பணித்த, பல தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட, சான்றாண்மை மிக்க ஒரு மாபெரும் மனிதனை இழந்துவிட்டோம். எதிர்காலத்தில் பொதுமக்கள் மத்தியில் குறிப்பாக மாகாணக் கட்டமைப்புக்களில் முக்கிய பொறுப்புக்களில் அவர் பணியாற்றுவார் என எதிர்பார்த்திருந்த எங்களுக்கும் பெரும் ஏமாற்றத்தையே அவரின் இழப்பு ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடாளுமன்றத்தில் நல்லிணக்கம், வடக்குக் கிழக்கு அபிவிருத்திக் குழுவுக்கு நான் தலைமை தாங்கிய குழுவின் நடவடிக்கைகளில் அவர் பெரும் பணியாற்றியமையை நினைவுகூர கடமைப்பட்டுள்ளேன். புனர்வாழ்வுபெறும் போராளிகள் மற்றும் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கான தொழில், வாழ்வாதாரத் துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளில் நிதி அமைச்சுக்கு பரிந்துரைகளை முன்வைப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் அவர் பெரும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டிருந்தார். முன்னாள் பிரதமர் தலைமையில் உருவாக்கப்பட்ட வடக்குக் கிழக்குக்கான கட்டமைப்பில் வடக்குக் கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அந்தக் கட்டமைப்பின் செயலராக விளங்கி, போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் நடைமுறைகளில் எம்முடன் இணைந்து செயற்பட்டிருந்தமை பாராட்டுக்குரியதாகும். 2018ஆம் ஆண்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருக்காமல் வரவு செலவுத் திட்டமும் நிறைவேற்றப்பட்டிருந்தால், போரால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு பிரதேசங்கள் அபிவிருத்தியில், வேலை வாய்ப்பில் பெரும் நன்மைகளை அடைந்திருக்கும் என்று அறுதியிட்டுக் கூறலாம். இந்தப் பணியில் சிவஞானசோதியின் பரிந்துரைகள் முக்கியமானவை. அதற்கு மேலாக முன்னாள் பிரதமர் தலைமையில் உருவான வடக்குக் கிழக்குக்கான கட்டமைப்பில் 'பனை நிதியம்' முக்கியமானது. அதன் உருவாக்கத்தில் பெரும் பங்காற்றியவர் சிவஞானசோதி. அவரின் இழப்பால் நாமும் துயருகின்றோம் என்றுள்ளது. (ஒ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி.ராஜ்

# கொரோனாவின் பெயரால் அதிகாரிகள் ஆட்டம்!

அரசன் எவ்வழியோ குடிகள் அவ்வழி என்பது அந்தக் காலம். அரசன் எவ்வழியோ அதிகாரிகள் அவ்வழியே என்பதுதான் இந்தக் காலம்.

இலங்கையில் கொரோனா முதலாவது அலை கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் தீவிரம் பெற்றிருந்தது. நாடு முழுவதும் முடக்கப்பட்டிருந்தது. ஊரடங்கு அறிவித்தல் ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் விடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. சில மாதங்களின் பின்னர் ஊரடங்கு, நீக்கம் அறிவிக்கப்பட்டது. சனி மற்றும் ஞாயிறு தினங்களில் ஊரடங்கும் ஏனைய 5 நாள்களில் ஊரடங்கு நீக்கமுமமாக சுமார் 3 வாரங்கள் நிலைமை தொடர்ந்தது.

கொரோனாத் தொற்று சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மாத்திரமா பரவும்? ஏனைய நாள்களில் பரவாதா? இவ்வாறான ஒரு தீர்மானத்தை சாதாரண மக்கள் தொடக்கம் சகலரும் எள்ளிநகையாடினர். வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் யாழ்ப்பாணம் தொடர்பில் அண்மையில் எடுத்த தீர்மானமும், கோத்தாபயவின் இந்த வகையிலான தீர்மானம்தான்.

அதாவது யாழ்ப்பாண நகரில், போதானா மருத்துவமனைக்கு அருகிலுள்ள இலங்கை மின்சார சபையிலிருந்து ஒரு புறமும், கே.கே.எஸ். வீதியில் ஒரு பகுதியும், கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதியும், மின்சார நிலைய வீதி முழுவதுமாக மாத்திரம் முடக்கம் அறிவிக்கப்பட்டது. போதனா மருத்துவமனையிலிருந்து வேம்படிச் சந்தி வரையிலோ, நகரின் நெரிசல்மிக்க பகுதியான ஸ்ரான்லி வீதி பகுதியோ முடக்கத்துக்குள் உள்வாங்கப்படவில்லை.

இதனைவிட மிகமிக வேடிக்கையாக, இவ்வாறு முடக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட இந்த வீதிகளுக்குள் உள்ள வங்கிககள், நிதி நிறுவனங்கள், தென்னிலங்கையைச் சேர்ந்த வர்த்தக நிறுவனங்களுக்குச் சொந்தமான கடைகள், அரச நிறுவனங்கள், மருந்தகங்கள் என்பவை திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குறிப்பிட்ட வீதிகளில் மாத்திரம்தான் கொரோனா உலாவுமா? அதைவிட முடக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பகுதிக்குள் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ள வங்கிகள், வணிக வளாகங்களுக்குள் கொரோனா உலாவாதா? இந்த இயல்பான கேள்விகள்தான் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் முடிவைப் பரிகசிக்க வைக்கின்றன. இந்த முடக்கம் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் எந்த விளக்கமும் விஞ்ஞானபூர்வமான நிரூபிப்பாக இல்லை.

### உள்ளூர் வர்த்தகர்கள் இலக்கானமை எதற்கு?

உள்ளூர் வர்த்தகர்களின் புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்கான வியாபாரத்தைச் செயலிழக்கச் செய்யும் வகையிலேதான் அவரது முடிவு அமைந்திருக்கின்றது. தென்னிலங்கை மற்றும் பல்தேசிய நிறுவனங்களுக்கு முடக்கத்திலிருந்து விலக்களித்த இந்த முடிவின் பின்னணி தொடர்பில் வர்த்தகர்கள் எழுப்பும் சந்தேகத்தையும் மறுப்பதற்கில்லை. யாழ்ப்பாணம் நகர சந்தைப் பகுதியில் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டமை உண்மை. இதனையடுத்து வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன.



இங்கேதான் மிக முக்கியமான கேள்வி எழுகின்றது. அரச திணைக்களங்கள் பலவற்றில் தற்போது தொற்றாளர்கள் கண்டறியப்படுகின்றனர். அவ்வாறு தொற்றாளர்கள் கண்டறியப்பட்டால் குறித்த அரச திணைக்களங்கள் முடக்கப்படுகின்றனவா? குறிப்பாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஒரு விடுதியில் மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட பலருக்குத் தொற்று ஏற்பட்டது. அதற்காக போதனா மருத்துவமனையே முடக்கப்பட்டதா? இல்லையே. தொற்று ஏற்பட்ட விடுதி மாத்திரமே தற்காலிகமாக மூடப்பட்டது.

நிலைமை இவ்வாறு இருக்கையில் நகர வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் தொற்று ஏற்பட்டதும், உள்ளூர் வர்த்தகர்களை மாத்திரம் இலக்கு வைத்து முடக்கத்தை அறிவித்தமை ஏன்? இந்த முடக்கம் தொடர்பான அறிவிப்பு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையில் நடந்த கலந்துரையாடலின் பின்னர்தான் அறிவிக்கப்பட்டது. மாவட்டச் செயலர்தான் இதனை அறிவித்தார். ஆனால் இந்த முடக்கம் தொடர்பான பிரதேசங்கள் முன்னரே தீர்மானிக்கப்பட்டு, அவற்றை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மாவட்டச் செயலகத்துக்கு கொண்டு வந்து சமர்ப்பித்தார் என்று மாவட்டச் செயலக அதிகாரிகள் கூறுகின்றனர். அதாவது முன்னரே எடுக்கப்பட்ட தீர்மானம் அங்கு வாசிக்கப்பட்டது என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

### ஏன் இந்தப் பாரபட்சம்?

யாழ்ப்பாணத்தில் முடக்கப்பட்ட பகுதிகளுக்குள் அத்தியாவசிய தேவைக்கான வர்த்தக நிலையங்களே திறக்கப் பட்டிருக்கின்றன என்று கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவர் சவேந்திர சில்வா தெரிவித்திருந்தார். மருந்தகங்கள் அத்தியாவசிய தேவைதான். ஆனால் தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்களின் இலத்திரனியல் கடைகள் எந்த வகையான அத்தியவசிய தேவை? இதனை விட அவர்களுக்கு எப்போது பி.சி.ஆர். மேற்கொள்ளப்பட்டது? இரண்டு தடவைகள் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டதா? இந்தக் கேள்விகளுக்கு பதில் சுகாதாரத் தரப்பிடம் இல்லை. அதனை விட நகரக் கொரோனாத் தொற்றுப் பிரச்சினை எழுந்த பின்னர் அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மை. ஆனாலும் அவர்களுக்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது எனக்கூறி அவற்றைத் திறப்பதற்கு அனுமதித்துள்ளனர்.

### அதிகாரங்களுக்கு அஞ்சி முடக்க அறிவிப்புக்கள்

அதிகளவானோர் கூடுவார்கள் என்பதால் நகரத்தின் மத்திய பகுதியை முடக்கவேண்டி ஏற்பட்டது என்ற விளக்கமும் சுகாதாரத் தரப்பினரால் முன்வைக்கப்பட்டது. நகரத்தில் இதனை விட அதிகளவானோர் கூடும் ஸ்ரான்லி வீதியில் வர்த்தக நிலையங்கள் மூடப்படவில்லை. யாழ்ப்பாணத்தின் நகரிலுள்ள பல்பொருள் அங்காடி விற்பனை நிலையங்கள், தியேட்டர்கள் எதுவும் மூடப்படவில்லை. அதிகளவானோர் செல்லும் எந்தவொரு அரச நிறுவனமும் மூடப்படவில்லை. ஆனால் நகரப் பகுதியிலுள்ள உள்ளூர் வர்த்தக நிலையங்கள் மாத்திரம் மூடப்பட்டுள்ளன. சுகாதாரத் தரப்பினரின் எந்தவொரு நியாயப்படுத்தலுமே ஏற்றுக்கொள்ள த்தக்கனவாக என்பது மாத்திரம் உண்மை.

புத்தாண்டுக் காலத்தில் வட்டிக்கு கடன் வாங்கி முதலீடு செய்த நடைபாதை வியாபாரிகள் உள்ளிட்ட சகல வர்த்தகர்களும் இப்போது வட்டி கட்ட முடியாமல் திணறுகின்றனர். இந்த முடக்கத்தால் அவர்களின் வியாபாரம் படுத்துவிட்டது வங்கிக் கடனைச் செலுத்த முடியாமலும், நிதி நிறுவனங்களின் கடன்களைச் செலுத்த முடியாமலும் அவர்கள் திணறுகின்றனர். இவற்றுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் முடக்கத்தை அறிவித்த அதிகாரிகள் கவனம் செலுத்தப்போவதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் எளியவனை எப்படி அடிக்கலாம் என்பதே சிந்தனை.

கொழும்பிலிருந்து படைபட்டாளமாக வந்து அடுத்த மாதம் நயினாதீவில் தேசிய 'வெசாக்' கொண்டாட்டம் செய்யப்போகின்றது ஆட்சிப்பீடம். இதற்கு எந்தத் தடையும் கட்டுப்பாடும் விதிக்கப்படமாட்டாது. தங்கள் நவ துவாரங்களையும் பொத்திக் கொண்டு ஆட்சிப்பீடத்துக்கு வாலாட்டும் வேலையை மாத்திரமே சுகாதாரத் தரப்புச் செய்யப்போகின்றது என்பதுதான் உண்மை. எப்படியோ இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் இன்றாவது கடைகளைத் திறக்க அனுமதி கொடுக்கப்பட்டாயிற்று. மீண்டும் முடக்கம், மீண்டும் பி.சி.ஆர். என்றவாறான நிலைக்குள் செல்லாமல் உரிய வழிமுறைகள் மற்றும் பொறிமுறைகளைப் பின்பற்ற உரியவர்கள் விரைந்து செயற்படுவார்களாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 . 09 . 1951

மறைவு 02 . 04 . 2019

அமரர்

### விசுவலிங்கம் கதிரவேலு

(சாவகச்சேரி ப.நோ.கூ சங்க
முன்னாள் கிளை முகாமையாளர்)

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் உங்கள் ஆடம்பரமில்லாத
அன்பான பேச்சும் செயல்களும்
இன்னமும் எங்கள் எல்லோர் மனங்களிலும்
அகலாது நிற்கின்றதே ஐயா!
நீங்கள் இல்லாத எங்கள் இல்லங்கள்
வெறிச்சோடிக் கிடக்கின்றது எங்கள்
எண்ணங்கள் எதுவும் இயங்காது நின்றுவிட்டது ஐயா!
சொந்தபந்தங்களின் உணர்வுகள் உறைந்து விட்டது

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

கல்வயல், மடத்தடி.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## துயர் பகிர்கின்றோம்



### திரு.வேலாயுதன் சிவஞானசோதி

முன்னாள் செயலாளர் தேசிய கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி, மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் தற்போதைய செயலாளர், மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொதுசேவை ஆணைக்குழு அங்கத்தவர்

நிறை மனிதராய் நின்று உலாவி
நெஞ்சில் நீங்கா நினைவுகளுடன்
துறையெல்லாம் துல்லியமாய்
கடமையெல்லாம் கண்ணியமாய்
திட்டமிடல் நெறிமுறைகள் சட்டங்கள்
எடுத்துரைத்தே பயிற்றுவித்து
இட்டமுடன் எமதுயர்வுக்காய்
இயன்றவரை உறுதுணையாய் இருந்து
எமை விட்டு பிரிந்து செல்ல
ஏங்கி தவிக்கிறோம். ஐயா
இறையடியில் இனிதே இணைந்திருக்க
விழிநனைய வேண்டுகின்றோம்.

அபிவிருத்தி இணைப்பாளர்கள்
யாழ் மாவட்டம்

## மரண அறிவித்தல்



### கந்தசாமி ஜெயராஜா

தோற்றம் 27.08.1969

மறைவு 01.04.2021

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஜெயராஜா அவர்கள் (01.04.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி சின்னமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைரமுத்து பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், அமுதா அவர்களின் கணவரும், டிலக்ஸ், டிசா ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராஜா, விஜயமலர், யோகராணி, உஷாந்தினி, சுகிர்தா, பிரேமலதா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை (08.04.2021) வியாழக்கிழமை வண்டனில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்

தகவல்:
குடும்பத்தினர்.

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
### வீடு வாடகைக்குத் தேவை

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் 50 பேர் தங்குவதற்கு தங்குமிட அறைகள், மலசலகூடங்கள், குளியல் அறைகளுடன் கூடிய வீடு அல்லது அறைகள் கொண்ட கட்டடதொகுதி உடனடியாக தேவைப்படுகின்றது. இவை 5KM க்கு உட்பட்டதாக அமைந்திருத்தல் வேண்டும். வாடகைக்கு தர விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவத்தினை அலுவலகத்தில் நேரடியாக பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு வைத்தியசாலைச் செயலாளருடன் 021 222 7351 இலக்க தொலைபேசியில் தொடர்புகொள்ளலாம். விண்ணப்பபடிவங்கள் 15.04.2021க்கு **முன்பதாக அலுவலகத்தில்கிடைக்கக் கூடியவாறு நேரடியாக கடித உறையில் இட்டு நேரடியாக கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.** விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டுக்கு அமைவாக வாடகை வழங்கப்படும்.

**பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.**

## வேலையாள் தேவை

கச்சேரி நல்லூர் வீதியில்
அமைந்துள்ள பல்பொருள்
வாணிபத்திற்கு
பெண் வேலையாள் தேவை
வயது எல்லை: 18-25

077 836 8926,077 404 8772

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

- **Programmer cum Systems Analyst Grade II**
- **Assistant Network Manager Grade II**

**Qualifications:**

Refer University website **www.jfn.ac.lk** for required qualifications

*Prior experience in Software design, development and maintenance in the field of computing would be preferable.

**Remuneration:**

| Post | Salary Code | Salary scale |
|---|---|---|
| Programmer cum Systems Analyst Grade II | U-AS-2(II) | Rs.50, 625 – 3x1,335– 54,630(EB) 55,965-14 x 1,335-74,655/-p.m |
| Assistant Network Manager Grade II | U-AS-2(II) | Rs.50, 625 – 3x1,335– 54,630(EB) 55,965-14 x 1,335-74,655/-p.m |

In addition to the above salary, the following allowances will be paid.

1. Additional monthly allowance - 20% of the basic salary
2. Cost of living allowance - Rs.7,800/-p.m.
3. Monthly Compensatory Allowance (MCA) - 45 % of the basic salary

**Statutory Benefits:**

I. *Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system*
II. *Gratuity payment*
III. *Employees' Trust Fund benefits*
IV. *Free Medical Services*

**Selection:** By Aptitude Test & Interview

**Closing date:**

Applications **should reach us on or before 12.05.2021**

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk**. Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to any branch of the **People's Bank in favour of University of Jaffna Collection Account Number: 970000090000387** of Bursar, University of Jaffna.

The candidates who apply for **more than one** post should submit **separate application** along with separate **Bank slip**. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications for the **above posts** shall be sent to the **Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka** under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. **Submission of Applications will not be entertained in person.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Application and referees reports should be in the relevant format. Illegible and Incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an aptitude test.

**REGISTRAR
UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA.
07.04.2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

1. The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximat 1 BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1 | Renovation works at Drug Store | 500.00 | 92,000.00 | 91 | 4.59 | C8 |
| 2 | Aluminium Partition for SHO Quarters, Renovatition works at Medical Clinic Room No 12 and Supply and Fixing Exhaust fan & Duct line at Eye ward | 500.00 | 18, 000.00 | 91 | 0.89 | C10 |
| 3 | Renovation of Toilet ward No 04 | 500.00 | 14,000.00 | 91 | 0.67 | C10 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 09.04.2021 up to 03.05.2021 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 am on 04.05.2021, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**08.04.2021.**

## பன்றித்தலைச்சி ஆலயத்தில் கடைகள் அமைக்கத் தடை

சாவகச்சேரி ஏப்.8

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் கோவில் பங்குனித் திங்கள் ஐந்தாம் உற்சவத்துக்கு கோவிலை அண்டிய பகுதிகளில். தற்காலிக விற்பனைக்கூடங்கள் மற்றும் நடமாடும் உணவு வகைகள் விற்பனை செய்வதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறி வியாபாரத்தில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சாவகச்சேரி பிரதேச சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## வேலையாள்கள் தேவை

இல.12 மகாத்மா காந்தி வீதி,
யாழ்ப்பாணத்தில் (பழைய பொலிஸ் நிலையம்)
இயங்கும் **ஸ்ரீ பேப்பர் மால்** ஒன்றிற்கு
பின்வரும் வேலையாள்கள் தேவை

- கணக்காளர்
- உதவிக்கணக்காளர்
- காசாளர்
- பொதி செய்யக்கூடியவர்கள்
- களஞ்சிய பொறுப்பாளர்
- மேற்பார்வையாளர்
- சாரதிகள்

077 861 5772, 076 214 0235

## பெயர்மாற்றம்

114/2. கொழும்புத்துறையில் வசிக்கும் **அலைக்சியூஸ் வெனான்சியூஸ்** ஆகிய நான் எனது பெயரை **அலைக்சியூஸ் செந்தூரன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **அலைக்சியூஸ் செந்தூரன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**அலைக்சியூஸ் செந்தூரன்**

# கேள்வி அறிவித்தல்
## வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி.
### மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2021

01. தலைவர், பெறுகைக்குழு, வவுனியா வடக்குபிரதேசசபை, நெடுங்கேணி தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

02. நிதி அமைச்சின் பொது நிதிதிணைக்கள சுற்று நிருபம் 04/2016(III) படிதேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அட்டவணையில் குறிப்பிட்டதற்கு இணங்க பொருத்தமான தரத்தில் சிடா (ICTAD/CIDA) பதிவுமேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி (தொலைபேசி: 024-2053014, மின்னஞ்சல் - vnpsnk@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2021.04.08 ஆம் திகதியிலிருந்துமேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை14.00 மணி வரை கேள்வி ஆவணத்தினை பார்வையிடலாம்.

05. ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் பூரணமான ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணமொன்றை எழுத்து மூலமான கோரிக்கையினை சமர்ப்பித்து தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங் கேணி எனும் அலுவலகத்திலிருந்து 2021.04.08ஆம் திகதியிலிருந்து 2021.04.22 வரை காலை 09.00 மணிக்கும் பி.ப14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000/ (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி எனும் முகவரிக்கு 2021.04.22ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர்களின் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்டகேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மாற்றம் செய்யவோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக் குழுழுமையான அதிகாரம் உண்டு.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்கள் (அறுபத்து மூன்று நாட்கள்) 2021.06.24 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்விஎண் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரு) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| PSDG/VU/VNPS/W/02/2021 | Construction of Water supply scheme at Periyakulam | 3.35 | 3மாதம் | C7 & C8 | 33,500.00 | 2021.07.22 |
| PSDG/VU/VNPS/W/03/2021 | Construction of Water supply scheme at Senaippilavu | 4.38 | 3மாதம் | C7 & C8 | 44,000.00 | 2021.07.22 |

10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2021.04.15ம் திகதி 10.30 மணிக்கு வவுனியா வடக்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர் தமது செலவில் கலந்து கொள்ளமுடியும்.

குறிப்பு– கடந்த2021.04.01ம் திகதியபத்திரிகையில் PSDG-special வேலைதொடர்பில் பிரசுரிக்கப்பட்ட- கேள்வி அறிவித்தலில் நொச்சிக்குளம் கிரவல் வேலைக்கான அளவு 1.450km ஆக கொள்ளப்படல் வேண்டும்.

தலைவர்,
பெறுகைக்குழு,
வவுனியாவடக்குப்பிரதேச சபை,நெடுங்கேணி,
2021.04.08

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 - 03 - 1944
மறைவு 08 - 04 - 2020

### அமரர் யோகராணி தில்லைநடராஜன்

08.04.2021

நகர்ந்து சென்றதுவோ ஓராண்டு
நம்பமுடியவில்லை தாயே நீங்களில்லாத இவ்வுலகை
நினைவில் என்றும் எம்மோடு! வாழ்ந்திடுவீர்.

உங்களைப் பிரிந்து வருடம் ஒன்று கடந்தாலும் உங்கள் குரல் இன்றும் எங்கள் காதுகளில் ஒலிப்பது போல் உணர்கின்றோம்

கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 - 10 - 1925
மறைவு 08 - 04 - 2011

### அமரர் வைரமுத்து குழந்தைவேலு

ஆண்டுகள் பத்து ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு என்றென்றும் எங்கள் மனதில்
நிறைந்திருக்கும் காலங்கள் விடைபெறலாம் ஆனாலும்
எம் கண் முன்னே நிழலாடும் உங்கள் நினைவு
ஒருபோதும் எம்மை விட்டு அகலாது.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு

குடும்பத்தினர்
நயினாதீவு - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



சித்தன்கேணி மண்ணின் மைந்தனும்
எமது பாடசாலையின் நலன் விரும்பியும்,
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின்
அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின்
முன்னாள் செயலாளரும்,
தற்போது பொதுச் சேவை ஆணைக்குழுவின்
உறுப்பினரும் ஜனாதிபதியின் சுஜாதீன மனித
உரிமை ஆணைக்குழுவின் செயலாளருமாகிய

உயர்திரு.

## வேலாயுதன் சிவஞானசோதி

அவர்கள் 05.04.2021 திங்கட்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு 21.12.1959 உதிர்வு 05.04.2021

பாடசாலைச் சமூகம்,
யா/ சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்.

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-11 புவனேஸ்வரி அம்பாள் வீதி ஆதன இல 39/9A என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதன வரிப் பதிவேட்டில் சொந்தக்காரர் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தினை ஜீவநாதன் மகள் சோபின்ஜாவும், ஜீவநாதன் மகள் கௌசன்யாவும், ஜீவநாதன் மகள் பானுஜாவும், ஜீவநாதன் சிறிகஜனும் பிரசித்த நொத்தாரிசு கனகரட்ணம் கேசவன் முகதாவில் வரையப்பட்ட 16310ம் இலக்க 02.01.2019ம் திகதியிடப்பட்ட அறுதி உறுதி மூலம் துரைசிங்கம் பிரபாகரனுக்கும் பெண் புஸ்பராணிக்கும் அறுதியாக வழங்கியுள்ளார்.

குறித்த 16310ம் இலக்க அறுதி உறுதியிலும் அதில் தாயுறுதியாக் குறிப்பிடப்பட்டுள்ள பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 16.07.2003ம் திகதியிடப்பட்ட 6308ம் இலக்க நன்கொடை உறுதியிலும் மாதாவழி முதுசம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை "பெரிய புலம் " நில.பர 4 குளி 08.45 இதில் நில.பர0 குழி 12.60. இது 20.11.1982ம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. ஆர்.நடேசன் அவர்களால் அளந்து வரையப்பட்ட 77ம் இலக்கப் படத்தில் சுட்டிய 1ம் இலக்கத்துண்டு. எல்லைகள்

கிழக்கு :- ஒழுங்கையும் பரமு நவரத்தினத்தின் ஆதனமும்.
வடக்கு :- பரமு நவரத்தினத்தின் ஆதனம்.
மேற்கு :- கே.மகாலிங்கத்தின் ஆதனம்.
தெற்கு :- குறித்த படத்தில் சுட்டிய 2ம் இலக்கத் துண்டு.

இதடங்கலும் முழு ஆதனத்தின் தென்மேற்குப்பக்கமாக "பெரிய புலம்" என்னும் ஆதனத்தினுள் அமைந்துள்ள கிணற்றில் இதற்குரிய பங்கும் வழமையான வாய்க்கால் பாவிப்புரித்தும் குறித்த படத்தில் சுட்டிய 2ம் இலக்கத் துண்டாலும் குறித்த படத்தில் சுட்டிய 2ம் இலக்கத் துண்டின் மேற்கெல்லையோரமாக வைக்கப்பட்ட ஆறு(6) அடி அகலப்பாதையாலும் மேற்கேயுள்ள புவனேஸ்வரி அம்பாள் ஒழுங்கையில் இருந்து இக்காணிக்கு போக்குவரத்து செய்யும் உரித்தும் கிழக்கெல்லை ஒழுங்கையில் இதற்குரிய பங்கும் அவ் ஒழுங்கையால் இக்காணிக்கு போக்குவரத்து செய்யும் உரித்தும்.

தற்போது துரைசிங்கம் பிரபாகரனும் பெண் புஸ்பராணியும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதன மானது துரைசிங்கம் பிரபாகரனும் பெண் புஸ்பராணியும் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விஸ்வலிங்கம் மணிவண்ணன்
கௌரவ முதல்வர்
மாநகரசபை யாழ்ப்பாணம்.

# சிவஞானசோதிக்கு மருதனார் மடத்தில் மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப்.8

மீள்டிகுடியேற்ற மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் வி.சிவஞானசோதிக்கு யாழ்.மாவட்ட மக்கள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அஞ்சலிக் கூட்டம் இன்று பி.ப. 2 மணிக்கு மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபையின் கட்டடத்தில் (இராமநாதன் கல்லூரிக்கு எதிரில்) நடைபெறவுள்ளது. (ஒ-319-5)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## சாரதிகளுக்கான பதவி வெற்றிடம்

ஹலோ ட்றஸ்ட் ஆனது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 25 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்றஸ்டின் எதிர்கால வேலைக்காக சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன, மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித் தளத்திற்கு நகர்த்திச் செல்வதும் அங்கு விபத்து நிகழ்ந்தால் அம்புலன்ஸ் சேவை வழங்குவதுமாகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் கனரக வாகன (AD) ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

**குறிப்பு :** விண்ணப்பங்கள் கிளிநொச்சி முல்லைத்தீவு (மணலாறு, கொக்கிளாய் அண்டிய பகுதிகள்) மாவட்ட நகரப் பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் ஏப்ரல் 16ம் திகதி 2021 வெள்ளிக் கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூல மாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.

த ஹலோ ட்றஸ்ற்,
450, திருநகர் மேற்கு,
கிளிநொச்சி.

# 17 ஆம் ஆண்டு நினைவு தினம்

மண்ணில் 24 - 04 - 1953



விண்ணில் 08 - 04 - 2004

அமரர்

## வேலுப்பிள்ளை இராஜரட்ணம் (செல்வம்)

(முன்னாள் R.B.புக்கிங் சென்ரர் உரிமையாளர்)

பாசமான எங்கள் அப்பா
இன்றுடன் பதினேழு வருடங்கள்
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
இன்னும் ஆறவில்லை எங்கள் துயரம்
ஓயவில்லை எங்கள் கண்ணீர்
ஆனாலும் பயணிக்கின்றோம்
வாழ்க்கைப் பாதையில்
உங்கள் நினைவுகளோடு
உங்கள் ஆத்மா ஆண்டவன் அடியில்
சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**St. John's College, Jaffna**
**Old Boys' Association**

ANNUAL GENERAL MEETING

The 104th Annual General Meeting of the St. John's College, Jaffna Old Boys' Association is postponed until further notice.

The Secretary

கொரோனா சிகிச்சைக்கு

# கோப்பாயிலுள்ள நிலையத்தை சீர்ப்படுத்த அழுத்தம் வேண்டும்

## முதல்வர் மணிவண்ணன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப்.8

கோப்பாயிலுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்தில் போதிய வசதிகள் இல்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர். நான் அனுமதிக்கப்பட்ட கிளிநொச்சி மருத்துவமனையில் உண்மையிலேயே சேவைகள் திருப்திகர மாகவே இருக்கின்றன. எனக்கு மாத்திரமல்ல அங்கிருந்த அனைவருக்கும் அதே உணர்வுதான். ஒரு மருத்துவமனையில் எதிர்பார்க்கக் கூடிய அளவிலும் பார்க்க அதிகமான சேவையை கிளிநொச்சி மருத்துவமனை வழங்குகின்றது இவ்வாறு தெரிவித்தார், யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணன்.

அவர் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

கோப்பாயிலுள்ள கொரோனா சிகிச்சை நிலையம் தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்க ப்படுகின்றன. அங்கே போதுமான வசதிகள் இல்லை என்றும் தெரிவிக்கின்றனர். அங்கே மூன்று நேரமும் உணவாக சோறு வழங்கப்படுகிறது எனவும் தெரிவிக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மக்களுக்கு மூன்று நேரமும் சோறு உண்ணும் பழக்கம் இல்லை. இந்த விடயத்தைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள்.

இது தொடர்பில் போதுமான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும். என்றார்.

(த-319-26)

## மரண அறிவித்தல்

### திருமதி யோகேஸ்வரி சேனாதிராசா



தோற்றம் 05.12.1959 — மறைவு 07.04.2021

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் கற்குளம் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி சேனாதிராசா நேற்று (07.04.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், சேனாதிராசா அவர்களின் பாசமிகு மனைவியும், ஜெய்சன், ஜெகிந்தன் (கனடா), லக்ஷி, கம்சன், வாசுகி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், அனிஸ்ரினா சுகிர்தினி, வர்ணப்பிரியா, கண்ணன், சயானா, மயூரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆதிஷ், நிவேஷ், ஹர்சன், கருணிகா, மிழ்லானி, அனன்யா, ஆருத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற ஞானாம்பிகை, கனகாம்பிகை, ஜெகதாம்பிகை, யோகேஸ்வரன் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தவராசா, காலஞ்சென்ற இராசேந்திரம், காலஞ்சென்ற யோகராசா, காலஞ்சென்ற பாலஸ்ரீ ஆகியோரின் மைத்துனியும், அமரர் மார்க்கண்டு நித்தியலட்சுமியின் மருமகளும், சந்திரா, மதன், கேமா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2021) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று, வில்லூன்றி இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## ரயில் மோதி ஒருவர் சாவு

கொடிகாமம், ஏப். 8

கொழும்பிலிருந்து யாழ். நோக்கிச் சென்று ரயிலில் மோதுண்டு ஆண் ஒருவர் இறந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் புதன்கிழமை இரவு 10.45 அளவில் மீசாலை பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-159)

## மரண அறிவித்தல்

### செல்லையா மகேந்திரன்

**(இளைப்பாறிய உத்தியோகத்தர் ஆனையிறவு உப்பு கூட்டுத்தாபனம்)**



அரியாலை முதலியார் வீதியை பிறப்பிடமாகவும், நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செல்லையா மகேந்திரன் நேற்று (07.04.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நவரத்தினம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், Dr.அருங்கரன், (யாழ் போதனா வைத்தியசாலை), மீரா (மக்கள் வங்கி, யாழ் பல்கலைக்கழக கிளை), அபிராமி (ஆளுநர் அலுவலகம்), பிரியங்கா (லண்டன்), Dr.ஆரூரன் (பதுளை வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், Dr. கௌரி, காந்தயுவன், Dr.சசீதரன், மதன்ராஜ் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, குலேந்திரன் மற்றும் தர்மாம்பாள் மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மங்களாதேவி, காலஞ்சென்ற வரதலட்சுமி, நவரட்ணராஜா, காந்தினி, விஜயரத்தினம், தியாகலிங்கம், காலஞ்சென்ற துரைரத்தினம், செல்வரட்னேஸ்வரி, நிலகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆதினி, மாசிலன், சாகித்தியன், நித்திலன், சுஜானி, தனுஷ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 702, நாவலர் வீதி (கனகரத்தினம் சந்தி) யில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

தோற்றம் 17.04.1943 — மறைவு 07.04.2021

702, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

077 6953758
021 221 1295

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழில் பெருந்தொற்று நிலைமைக்கு வர்த்தகர்களும் மக்களுமே காரணம்

## இராணுவத் தளபதி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 8

'யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டமைக்கு வர்த்தகர்களும், மக்களும் உரிய முறையில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமையே பிரதான காரணமாகும் இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் கொரோனா நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறான குற்றச்சாட்டை அவர் முன்வைத்துள்ளார். அடுத்த சில நாள்களில், மக்களின் நடத்தைகளைப் பொறுத்தே நாட்டில் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை குறைவடையவோ அல்லது அதிகரிக்கவோ வாய்ப்பு உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-22)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### சமஷ்டி முறைமையே....

இவ்வாறு புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர் குழு முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி இடித்துரைத்தது.

'நாட்டின் இன்றைய பேரழிவுச் சூழ லுக்கும் பின்னடைவு நிலைக்கும் ஒற்றையாட்சி அரசமைப்பு முறைமையே காரணம். பொருளாதார ரீதியிலும், பிற விடயங்களிலும் இலங்கை தோற்றுப்போன நாடாகத் துவண்டு கிடப்பதற்கு ஒற்றையாட்சி முறைமையே முழுக்காரணமாகும்' என்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சுட்டிக்காட்டியது.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத் தொகுதியில் உள்ள நிபுணர் குழுவின் கலந்துரையாடல் மண்டபத்தில், நேற்றுக் காலை 9 மணி முதல் சுமார் ஒன்றரை மணிநேரம் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாகத் தனது கருத்துக்களை முன்வைத்தது.

அந்தக் கூட்டணி சார்பில் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் க.சுரேஷ் பிரேமச்சந்திரன், கலாநிதி க.சர்வேஸ்வரன், எம்.கே.சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் மற்றும் செல்வேந்திரா ஆகியோர் பங்குபற்றினர்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அங்கு தெரிவித்த முக்கிய கருத்துக்களின் சாரம்சம் வருமாறு:

'இலங்கை ஒரு பல்லின, பல்மத, பல்மொழி பேசும் மக்களைக் கொண்ட நாடு என்பதை இலங்கை அரசு ஏற்று, இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. அந்த யதார்த்தத்தை ஏற்று அங்கீகரிக்கும் ஓர் அரசமைப்பு மூலமே நாட்டை மேம்படுத்த முடியும்.

தமிழ் மக்கள் மீது சிங்களவரின் பெரும்பான்மையின் மூலம் பலவந்தமாகத் திணிக்கப்பட்ட ஒற்றையாட்சி அரசமைப்பு முறைமை பெரும் தோல்வி கண்டுவிட்டது. இன்று நாடு எதிர்கொண்டுள்ள பேரிழப்புக்களுக்கும், பின்னடைவுகளுக்கும் அவலங்களுக்கும் அது மட்டுமே காரணம். அதனால்தான் அதிலிருந்து வெளியே வருமாறு நாம் கோருகின்றோம்.

சமஷ்டியும் கூட்டாட்சியும் பிரிவினை அல்ல. ஒன்றுபட்டு, ஐக்கியமாக வாழ்வதற்குரிய உயரிய முறைமைகளே அவை. நாடாளுமன்றுக்குப் பதில் கூறக்கூடிய பிரதமரின் கீழ் நிறைவேற்று அதிகாரம் பிரயோகிக்கப்படும் ஒரு முறைமை என்றால் அதன் கீழ் சமஷ்டி முறைமை அரசமைப்பையும், அப்படியில்லாமல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைத் தொடர்வதாக இருந்தால், கூட்டாட்சி முறைமை அரசமைப்பையும் ஏற்படுத்துவதே நாட்டின் மேன்மைக்கு ஒரே வழியாகும். உலக நாடுகள் பலவற்றிலும் பல்லின, பல்மொழி, பல் சமூக தேசங்களை ஒன்றிணைக்கும் உயரிய ஆட்சி முறையாக இந்த இரண்டுமே உள்ளன. சிறுபான்மை இனங்களையும் உள்வாங்கும் ஓர் அரசமைப்பை இலங்கை ஏற்படுத்த வேண்டும் என்றால் இந்த இரண்டில் ஒன்றுக்கு இணங்குவது தவிர்க்க முடியாத கட்டாயமாகும்'- என்று தெரிவிக்கப்பட்டது. (ம-22)

### ரஞ்சன்...

ராமநாயக்கவின், நாடாளுமன்ற உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளது என சபாநாயகர் நேற்று அறிவித்தார். அவரின் இந்த அறிவிப்புக்கு எதிர்க்கட்சியினர் எதிர்ப்பு வெளியிட்டனர்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு கூடியது. சபாநாயகர் அறிவிப்புவேளையின்போது ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு தெரியப்படுத்தினார். சபாநாயகரின் இந்த முடிவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

'ரஞ்சன் ராமநாயக்கவுக்கு விடுமுறை வழங்குவதற்கான யோசனையை நாம் ஏற்கனவே முன்வைத்தோம். எனினும், இவ்விவகாரம் நீதிமன்றம் சென்றுள்ளதால் நீதிமன்ற தீர்ப்பு வெளியாகும்வரை காத்திருப்பதாக எமக்கு அறிவிக்கப்பட்டது. எனினும், ரஞ்சன் ராமநாயக்கவின் வருகையை அடிப்படையாகக்கொண்டு அவரின் நாடாளுமன்ற உறுப்புரிமையை இல்லாது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவதற்கு ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வாய்ப்பு இருக்கின்றது. அதுவரையில் இந்த முடிவை பிற்போடவேண்டும். அதற்கான வாய்ப்பை வழங்காமல் அவசரமாக முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது தவறான செயலாகும்'

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

எனினும், அக்கோரிக்கையை சபாநாயகர் ஏற்க மறுத்தார். அவரின் வருகையை மட்டும் அடிப்படையாகக்கொண்டு அல்ல, நீதிமன்றத் தீர்ப்பையும் அடிப்படையாக வைத்தே முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று அறிவித்தார்.

இதனையடுத்து ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் எழுந்துநின்று கோசமெழுப்பினர். ரஞ்சன் ராமநாயக்க விவகாரத்தில் சபாநாயகர் கையாண்ட அணுகுமுறை தவறெனவும் சுட்டிக்காட்டினர். இதனால் சபையில் சிறிதுநேரம் சலசலப்பு ஏற்பட்டது.

சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க மூன்று மாதங்களாக நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்கவில்லை. அவர் நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, நீதிமன்றால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ... நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர, நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்வதற்கும், நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்கும் சபாநாயகர் அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ம-ஒ.ப,44)

### அலைபேசியில்...

நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட அவர், நேற்று நீதிமன்றத்தில் முற்ப டுத்தப்பட்டார். இளைஞனின் சார்பில் மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸ் முன்னிலையானார். இருதரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த நீதவான் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இளைஞனை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ம)

### சிங்கள....

சாணக்கியன் சபையில் நேற்றுத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகளை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில், உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பலவீனமுற்றுள்ள அரசு அதிகாரத்தைக் கையில் எடுக்கும் நோக்கத்தில் மீண்டும் ஒரு சமூகத்துக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டலாம்.

இலங்கை குறித்து வெளிநாட்டவர் மத்தியில் நல்லதொரு எண்ணப்பாடு இருந்தாலும், இலங்கையர்கள் சக இலங்கையர்களுடன் அன்பாக இருப்பதில்லை. காலத்துக்குக் காலம் மலையக இலங்கையர்கள், தமிழர்கள், பறங்கியர்கள் இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

தேசிய ரீதியல் தமிழர்கள் கல்வி கற்க முடியாத, விவசாயம் செய்ய முடியாத, ஏனைய வியாபாரங்களில் ஈடுபட முடியாத் நிலைமை உருவாக்கப்பட்டது. அவர்கள் நாட்டை விட்டு வெளியேறி, இன்று வெவ்வேறு நாடுகளில் நல்ல நிலைமையில் உள்ளனர்.

இதனிடையே, முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன. பெரும்பான்மை சமூகத்தை அவர்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டன. முஸ்லிம்கள் தொடர்ச்சியாக நெருக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக வன்முறைகள் இடம்பெற்ற காரணத்தால்தான் உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலும் இடம்பெற்றது' என்றார். (ம-22)

### மாநகர....

-"இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாண மாநகர முதல்வரான மணிவண்ணன்.

இது தொடர்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

யாழ். நகரத்தை தூய்மையாகவும் அழகாகவும் மாற்றுவதற்காக யாழ். மாநகர சபையால் ஐந்துபேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தமது கடமைகளை இன்றையதினம் (நேற்று) ஆரம்பித்துள்ளனர்.

அவர்களை அடையாளப்படுத்த அவர்களுக்குச் சீருடை வழங்கப்பட்டுள்ளது. விரைவில் அடையாள அட்டைகளும் வழங்கப்படும். குப்பைகளை வீதிகளிலே வீசி அசிங்கமாக்குகின்ற முயற்சியில் ஈடுபடுபவர்கள், வெற்றிலை துப்புபவர்கள் மற்றும் நெரிசலை ஏற்படுத்தும் விதத்தில் வாகனங்களை நிறுத்துபவர்கள் போன்றோர்மீது அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். இந்த நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் -என்றார். (ம-ற20,319,26)

### துப்பினால்...

ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படும். இதைத் தொடர்ந்து செய்பவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வரை தண்டப்பணம் அறவிடப்படும். அதேபோல பொது இடங்களில் வெற்றிலை துப்புபவர்களுக்கு 2 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்படும். தொடர்ந்து செய்தால் 4 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்படும். பொது இடங்களில் மலசலம் கழிப்பவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா தண்டமும், மீண்டும் மீண்டும் அதனைச் செய்தால் 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்படும் - என்றார். (ம-319,26)

### யாழ்...

மகேசன் தெரிவித்தார்.

யாழப்பாணம், நகரப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள் சிலருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதை அடுத்து, கடந்த 26ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் மாநகர மத்தியில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு வர்த்தக நிலையங்களில் பணியாற்றுவோர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட இரண்டு பி.சி.ஆர். பரிசோதனைகளில் தொற்று இனங்காணப்பட்டோரின் கடைகள் தவிர்ந்த ஏனைய கடைகளைத் திறப்பதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ். மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்ததாவது:

வர்த்தகர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் தொற்று உறுதி செய்யப்பட்டோர் தவிர்ந்த ஏனையோரின் கடைகளை இன்று முதல் திறப்பதற்கு அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது பண்டிகைக் காலம் என்பதால் மக்கள் வழமைபோன்று ஒன்றுகூடல் செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும்.

யாழ்ப்பாணம் மாநகரப் பகுதிகளில் வீதித் தடைகளை ஏற்படுத்தி, பொதுமக்கள் ஒன்றுகூடாத வண்ணம் பார்த்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அபாய நிலை இன்னும் நீங்கவில்லை.

எனவே தற்போதைய நிலையில் பொது மக்கள் ஒன்றுகூடுவதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஊர்காவற்றுறையில்

# மூடப்பட்ட மதுபானசாலையை மீண்டும் திறக்க கடும் முயற்சி

## எதிர்ப்பு தெரிவித்து இன்று போராட்டம்

**யாழ்ப்பாணம், ஏப்.8**

**ஊர்காவற்றுறையில் மக்கள் எதிர்ப்பால் மூடப்பட்ட மதுபானசாலையை மீண்டும் அமைக்க எடுக்கப்படும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று வியாழக்கிழமை காலை தீவக சிவில் சமூக அமைப்புக்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.**

மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள் அனைவரும் இந்த போராட்டத்தில் பங்குகொண்டு தமது ஆதரவை வழங்கலாம் என்று தீவக சிவில் சமூக அமைப்பின் பொருளாளர் க.குணாளன் அழைப்பு விடுத்துள்ளார்

இதேவேளை, மதுபானசாலையை மீண்டும் அமைக்க எடுக்கப்படும் முயற்சிக்கு ஊர்காவற்றுறை மருத்துவமனை சமூகத்தினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் ஊர்காவற்றுறை மருத்துவமனை அத்தியட்சகர் பிரதேச செயலருக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது;

ஊர்காவற்றுறையில் மதுபானசாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடம், சுருவில் பிரதான வீதி எமது மருத்துவமனையில் இருந்து அண்மைப்பகுதியாக உள்ளது. அத்துடன் 2019ஆம் ஆண்டு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஊர்காவற்றுறையில் அமைக்கப்படவுள்ள மதுபானசாலை சம்மந்தமாக மருத்துவ அத்தியட்சகராலும் ஊர்காவற்றுறை பொது அமைப்புக்களாலும் சுட்டிகாட்டப்பட்டு ஆட்சேபிக்கப்பட்டதற்கமைவாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கு குறித்த கூட்டத்தில் கொண்டுவரப்பட்டு இருந்தது. அவர்களும் இந்த விடயமாக ஆராய்ந்து தற்பொழுது குறித்த பிரதேசத்தில் மதுபானசாலை அமைப்பதனை நிறுத்துவதான தீர்மானத்தை எடுத்துள்ளனர். அதன்படி மதுபானசாலையை மீண்டும் அமைப்பதனால், மீண்டுமொரு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில்தான் தீர்மானிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையானது அனைத்து தீவுகளுக்குமான முதன்மை மருத்துவமனையாகக் காணப்படுவதுடன் அன்றாடம் அதிகளவான நோயாளர்கள், பொதுமக்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் வருகை தருகின்ற நிலையில் மருத்துவமனைக்கு மிக அண்மையாக மதுபானசாலையை அமைக்கும் செயற்பாடானது மதுப்பாவனையாளர்களால் மருத்துவமனைச் செயற்பாடுகளுக்கும், நோயாளிகளுக்கும், பொதுமக்களுக்கும் இடையூறுகள் ஏற்படக்கூடிய நிலைமையையும் பாதுகாப்பற்ற சூழலையும் ஏற்படுத்துவதுடன், சமூக ரீதியாக மதுப்பாவனையாளர்களை அதிகளவில் உருவாக்கக்கூடிய இக்கட்டான நிலைமையையும் வலிந்து உருவாக்கும். எனவே மேற்படி மதுபானசாலையை அமைப்பதற்குரிய அனுமதியை வழங்காதிருப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றுள்ளது. (ஜ-319)

## மூவருக்கு மேற்பட்டோர் போராடினால் கைதாம் !

*ஊர்காவற்றுறை பொலிஸ் எச்சரிக்கை*

யாழ்ப்பாணம். ஏப். 8

ஊர்காவற்றுறை பிரதான வீதியில் இயங்கிவந்த மதுபானசாலையை மூடுமாறு கோரி தீவக சிவில் சமூக அமைப்புகள் இன்று போராட்டம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அந்தப் போராட்டத்தில் மூன்று பேர் மட்டுமே பங்குபற்றலாம் என்று போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்களுக்கு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்சரித்துள்ளார்.

தீவக சிவில் சமூக செயற்பாட்டாளரும் ஆர்ப்பாட்ட ஒருங்கிணைப்பாளருமான கருணாகரன் குணாளனை தொடர்புகொண்ட ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, "நீங்கள் மேற்கொள்ளும் போராட்டத்தில் மூவரே பங்குபற்ற முடியும். அதை மீறி பங்குபற்றினால் கைதுசெய்யப்படுவீர்கள்." என்று எச்சரித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் குணாளனை தொடர்புகொண்டு கேட்டபோது, "குறித்த ஆர்ப்பாட்டம் திட்டமிட்டபடி நடைபெறும். சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி குறித்த மதுபானசாலைக்கு எதிரான போராட்டத்தில் அனைத்து ஆர்வலர்களும் பங்குபற்றி, தமது எதிர்ப்பை வெளிப்படுத்த முன்வர வேண்டும்." என்று தெரிவித்தார். (து-319)

## மதுபானசாலைகள் 3 நாள்களுக்கு பூட்டு

கொழும்பு,ஏப்.8

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 13 மற்றும் 14 ஆம் திகதிகளில், அனைத்து மதுபான சாலைகளும் மூடப்படும் என்று மதுவரித்திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன் ஏப்ரல் 26 ஆம் திகதி பௌர்ணமி தினத்தன்றும் மதுபானசாலைகள் மூடப்படும். அதேவேளை சுற்றுலாவாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட. ஹொட்டல்களில் உள்ள மதுபான சாலைகள் திறந்திருக்கும்.

இந்தக் காலகட்டத்தில் போதைப்பொருள் மற்றும் புகையிலைக் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளை 1913 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு மக்கள் அறிவிக்க முடியும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (பு-4)

## முதலாம் பக்க தொடர்ச்சிகள் ...

*புலிகளைப்...*

வார்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

அதேவேளை, ஊடகங்கள் மற்றும் பேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடகங்களிலும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களைப் போற்றியும், அவர்களை நினைவு கூர்ந்தும் கருத்துக்களைப் பதிவிடுபவர்களும் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க இடமளியோம். அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸாரும் முப்படையினரும் இணைந்து மேற்கொண்டுள்ளனர். இந்நிலையில், கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களைப் புகழ்ந்தும் நினைவுகூர்ந்தும் சிலர் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில் இருக்கின்றபோது இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிப்பவர்கள் இனிமேல் உடன் கைதுசெய்யப்படுவார்கள் என்றார். (ஒ-22)

*82 தொற்றாளர்கள்....*

**முல்லேரியா பரிசோதனை**

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் என 464 பேரின் மாதிரிகள் முல்லேரியா ஆய்வுகூடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன. பரிசோதனையில் யாழ்ப்பாணம் கடைத் தொகுதிகளுடன் தொடர்புடைய 54 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிக்கை இன்று காலை (நேற்று) கிடைத்துள்ளது.

**யாழ்ப்பாணப் பரிசோதனை**

யாழ்ப்பாணத்தில் 607 பேரின் மாதிரிகள் நேற்று ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 28 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் 25 பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் 9 பேர் உடுவிலைச் சேர்ந்தவர்கள். இந்த 9 பேரில் 5 பேர் யாழ்ப்பாணம் நவீன சந்தைத் தொகுதித் தொற்றுடனும், 4 பேர் ஏனைய தொற்றாளர்களுடனும் தொடர்புடையவர்கள். நல்லூரில் 6 பேர் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர். அனைவரும் யாழ்ப்பாணம் நவீன சந்தைத் தொகுதியுடன் தொடர்புடையவர்கள். சண்டிலிப்பாயில் இரு தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டனர். இருவரும் யாழ்ப்பாணம் நவீன சந்தைத் தொகுதியுடன் தொடர்புடையவர்கள். தெல்லிப்பழையில் மூவர் அடையாளப்படுத்தப்பட்டனர். அவர்களில் ஒருவர் மருத்துவமனையில் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டவர். சங்கானையில் ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. அவர் கொரோனாத் தொற்றாளருடன் நேரடித் தொடர்புடையவர். அத்துடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட நால்வருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இவர்களுடன் மன்னார் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட இருவருக்கும், வவுனியாவில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம-26,319)

சாரதி தேவை
யாழ் நகரில் பொருட்களை Delivery செய்வதற்கு Light Vehicle + AD வகைகள் உள்ளவர்கள் விரும்பதக்கது
தொடர்பு 076 949 6691

விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி
A/L 2021 & Day தொழினுட்பப் பிரிவு
உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
விசேட வினாத்தாள் வகுப்புக்கள்
ஆரம்பம் 2021.04.09
புதிய மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்.
077 248 7774, 021 221 7860, 076 552 9093

பண்ணை பராமரிப்புக்கு வேலையாட்கள் தேவை
புத்தூரில் உள்ள பண்ணையொன்றிற்கு தங்கியிருந்து பராமரிப்பு செய்வதற்கு வேலையாட்கள் தேவை.
சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்பு: குமார் 077 220 8040

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08. 04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.